
17 JAN 2007
நூலகம்

# இந்து ஒளி

# HINDU OLI




தீபம் - 11 சுடர் - 01

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுச் சிறப்பிதழ்

அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

Quarterly of
All Ceylon Hindu Congress

# பிறந்தநாள் வைபவ நிகழ்வு (21.10.2006)

அக்டோபர் மாதத்தில் பிறந்த இரத்மலானை விடுதிப் பிள்ளைகளது பிறந்தநாள் வைபவ நிகழ்வு








யுனி ஆர்ட்ஸ் நிறுவன அதிபர்
திரு. பொன். விமலேந்திரன் அவர்கள்,
இரத்மலானை மாணவர் விடுதிக்கு
அன்பளிப்பாக வழங்கிய
கந்த சஷ்டி கவசம் நூல்களை
மாமன்ற விடுதிக் குழுச் செயலாளர்
திருமதி அ. கயிலாசபிள்ளை அவர்கள்
பெற்றுக்கொள்கிறார்.

உ
சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

–திருச்சிற்றம்பலம்–

## தேவாரம்

**மதி**நுதன் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
**நதி**யொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
**கொதி**யுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
**அதி**குண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

## திருவாசகம்

கமலநான் முகனும் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
**வி**மலனே யெமக்கு வெளிப்படா யென்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
**தி**மிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே யடியே னாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே!

## திருவிசைப்பா

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங்
கிளங்கமு குளங்கொள்நீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதணம்
முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொள்நீர்த் தரளத் திரள்கொள்நித் திலத்த
செம்பொற்சிற் றம்பலக் கூத்த
பொறையணி நிதம்பப் புலியத ளாடைக்
கச்சநூல் புகுந்ததென் புகலே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

அருளின் நீர்மைத் திருத்தொண் டறிவரும்
தெருளில் நீரிது செப்புதற் காமெனின்
வெருளில் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய
பொருளின் னாகுமெனப் புகல்வா மன்றே

–திருச்சிற்றம்பலம்–


உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் – 11 சுடர் – 01
விய வருடம் மார்கழித் திங்கள் 1ம் நாள்
16. 12. 2006


## நாவலர் பெருமானை நினைவு கூரும் வேளை...

யாழ் மண்ணில் பிறந்து அங்கு வாழ்ந்து அந்த மண்ணில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்திய வரலாற்றுப் புகழ்மிக்கவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். அப்பெருமானின் வரலாறும் பணிகளும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை. ஆனால் இன்றைய உலகில் நாவலர் பெருமானை எமது இனம் மறந்துகொண்டு போகின்றதா என்ற ஏக்கமான நிலை உருவாகி இருக்கிறது. அதே தருணம் இன்று யாழ் மக்களுக்கு வழிகாட்ட, அவர்களுக்காகப் போராட ஒரு நாவலர் இல்லையே என்பதும் எமது ஏக்கம்.

இக்கட்டத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இணைந்து கொழும்பு விவேகானந்த சபை 2006 டிசம்பர் 16ம்,17ம் திகதிகளில் நாவலர் பெருமானை நினைவுகூர்ந்து ஓர் ஆன்மீகக் கருத்தரங்கினை தலைநகரில் நடத்துகின்றது. இன்றைய காலகட்டத்தில் இஃது அவசியமான-தேவையான ஒரு பணி. அவரின் வாழ்வையும் போதனைகளையும் அறிந்து போற்றுவது மட்டும் போதாது; அவ்வழி நின்று பணியாற்றுதலே முக்கியம்.

நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்தில் சைவர்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். அப்பணி உண்மையில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, இலங்கையிலும் தமிழகத்திலும் கூட எல்லோரும் ஏற்றுக்கொண்ட ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. சமயப் பிரச்சார, கல்விப் பணிகளில் மட்டுமல்ல சமூகப் பணிகளிலும் தலைமை தந்து தான் வாழ்ந்த காலத்தில் தனது சமூகத்திற்கு நல்லதொரு கலங்கரை விளக்காகத் திகழ்ந்தார்.

எமது மண்ணில் அன்று ஏற்பட்ட பஞ்சநிலையில் நாவலர் பெருமான் ஆற்றிய சேவையை அண்மையில் தெய்வத் திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பின்வரும் வார்த்தைகளில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

> "எமது மண்ணில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தின் காரணமாகப் பாதிப்படைந்தோர் பலர். அதனைப் போக்குவதற்காக கஞ்சித் தொட்டித் தர்மம் ஒன்றை ஏற்படுத்தினார். இதனால் பலர் பட்டினிதீர்ந்து நலமடைந்தனர். நாவலரது இப்பணியானது சமூகத்தின் மீதான அவரது பற்றை வெளிக்கொணர்ந்து இவர் ஆற்றிய பல்வேறு சமூகப் பணிகள் பற்றி எமது நாடும் ஏடும் நன்கு அறியும்"

யாழ்ப்பாண மக்களை அன்று பட்டினியிலிருந்து காப்பாற்ற ஒரு நாவலர் இருந்தார். கஞ்சித்தொட்டித் தர்மம் ஏற்படுத்தி அப்புனித சேவையை ஆற்றினார். ஆனால் இன்று அதே யாழ்ப்பாணத்தில்- நாவலர் பிறந்த மண்ணில் பட்டினி! கஞ்சித்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# இந்தச் சுடரில் .........


| | |
|---|---|
| பஞ்சபுராணங்கள் | 01 |
| நாவலரின் மானுட விழுமியங்கள் | 04 |
| ஆறுமுக நாவலரும் வடமொழியும் | 07 |
| நந்தியும் இந்து சமயமும் | 08 |
| மார்கழி மாதச் சிறப்பும் திருவெம்பாவையும் | 09 |
| இறைவன் தந்த கோயில் | 11 |
| அருட்பிழம்பாக நின்ற அண்ணாமலையான் | 13 |
| அனைவரிலும் உயர்ந்தவன் யார் | 15 |
| தந்தையைத் தண்டித்த தனயன் | 16 |
| பெரியோரை மதித்தல் | 18 |
| தாய் செய்த நன்றி | 19 |
| விருட்சங்களின் தெய்வீகத் தன்மையும் மதங்களில் அவற்றின் முக்கியத்துவமும் | 21 |
| நிகழ்வின் பார்வை | 22 |
| திருவெம்பாவை | 24 |
| **Temple Worship** | 29 |
| **Philosophy : Synthesis of Science and Religion** | 33 |
| சைவ சமய ஆய்வு கூடல் – பொகவந்தலாவ | 34 |
| விமர்சனப் பார்வை | 35 |


## அடுத்த சுடர்

விய வருடம்
தை – பங்குனி

## வாழ்த்து

தவமொடு வேள்வி வாழ்க தானமு மறமும் வாழ்க
சிவனரு ளோங்கி மேலாம் சிவநெறி செழித்து வாழ்க
பாவமும் பழியும் வீழ்ந்து பரனருள் தன்னா லென்றும்
சைவமும் தமிழும் வாழ்க தரணியிலுள்ளோ ருய்ய.


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
விய வருடம் ஐப்பசி – மார்கழி இதழ்
மார்கழித் திங்கள் 1ம் நாள்
16.12.2006



ஆசிரியர் குழு :
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. த. மனோகரன்
திரு. கு. பார்த்தீபன்


| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா | 80.00 |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் | 10.00 |


அகில இலங்கை இந்து மாமன்றம்
A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2,
இலங்கை.
இணையத்தளம் : http:/www.hinducongress.org
மின்னஞ்சல் : admin@hinducongress.org
தொலைபேசி எண்: 2434990, தொலைநகல் : 2344720


இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில்
தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்
ஆக்கியோன்களுடையதே.


# HINDU OLI

**Aipasi - Markazhi**
**ALL CEYLON HINDU CONGRESS**
**16th December 2006**



**Editorial Board :**
Prof. A. Shanmugadas
Mr. Kandiah Neelakandan
Mr. K. Rajapuvaneeswaran
Mr. D. Manoharan
Mr. G. Partheepan


| | | | |
|---|---|---|---|
| Price : | Rs. | 20.00 | per copy |
| Annual Subscription (Inland) | Rs. | 80.00 | |
| Annual Subscription (Foregin) | U. S. $ | 10.00 | |
| (Including Postage) | | | |


**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress,org
E-Mail : admin@hinducongress.org
Telephone No.: 2434990, Fax No.: 2344720


Next Issue :
**Thai - Pankuni**

**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**

**நாவலர் பெருமானை நினைவு கூரும் வேளை...** (ம் பக்கத் தொடர்ச்சி...)

தொட்டித் தர்மம் செய்கின்றோமா? நாவலரின் வாரிசுகள் என்று பெருமை பேசும் எம்மவர் சிந்திக்க வேண்டும். பல தடைகள்.... சொல்லொண்ணா மறுப்புக்கள்.. இவை எமது மனம் விரும்பினாலும் செய்யமுடியாத நிலைக்குள் எம்மைப் பூட்டி வைத்திருக்கின்றன. என்றாலும் நாவலன் புகழைப்பாடும் நாம் அடங்கி இருக்கக் கூடாது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கும் சிறுவர் விடுதிகள், முதியோர் இல்லங்கள், புற்று நோயாளருக்கு பால்மா இல்லை என்ற குறையறிந்து அகில இலங்கை இந்து மாமன்றம் பல நாட்கள் முயற்சி செய்து பால்மா பக்கெற்றுக்களை மாமன்றத் துணைத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் மூலம் அவர்களுக்குச் சென்றடைய வைத்திருக்கிறோம். யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர்களுக்குப் போதிய மருந்துப் பொருட்கள் இல்லை என யாழ் வைத்தியசாலை வைத்திய கலாநிதி சு. இரவிராஜ் அறியத்தந்தார். உடனே மாமன்றமும், மாமன்றப் பணிகளுக்குப் பல வகைகளில் நிதியுதவி செய்து வரும் மனித நேயமும் இணைந்து மருந்துவகைகளை வாங்கி அனுப்பி யிருக்கிறோம். யாழ் மாவட்டத்தில் புற்று நோயால் வாடுபவர்களுக்கு பால்மா போதியதில்லை. சிக்கன் குனியாவால் வாடுபவருக்குப் பனடோல் இல்லை என்று அறிகிறோம். அவற்றை வாங்கி அனுப்ப முயற்சிகள் செய்கிறோம். இவற்றைச் செய்வதற்கு இன்று மிகவும் கஷ்டமான கட்டுப்பாடுகள், வசதிக் குறைவுகள் இருந்தும் எமது கடமையை நாவலர் பரம்பரை என்பதை மறவாது செய்வதற்கு முயற்சிகள் செய்துகொண்டே இருக்கிறோம். மட்டக்களப்புக்கும் அகதிகளுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பினோம்; இன்னும் அனுப்ப இருக்கிறோம். ஒழுங்குகள் செய்வதில்தான் சிக்கல். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை நினைவு கூர்ந்து அவரைப்பற்றிச் சிந்திக்கும்போது அவர் செய்த தமிழ்ப்பணியையும் மறக்க முடியாது. ஆறுமுக நாவலரைப் பற்றி அமரர் கல்கி எழுதியிருந்ததைப் பார்ப்போம்.

> "ஈழ நாட்டில் தமிழர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே குடியேறினார்கள். தமிழகத்தோடு எப்போதும் தொடர்பு கொண்டிருந்தார்கள். தமிழரையும், தமிழர் நாகரிகத்தையும் சமயத்தையும் வளர்த்தார்கள். சிலகாலமாகத் தமிழ் மறுமலர்ச்சி என்பது பற்றி அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். தமிழ் மறுமலர்ச்சிக்குக் காரணமானவர்கள் பலருடைய பெயர்களும் சொல்லப்படுகின்றன. ஆனால், உண்மையில் தமிழ் மறுமலர்ச்சிக்கு ஆதிகாரண புருஷர் யார் என்று ஆராய்ந்து பார்த்தோமானால் அவர் ஈழ நாட்டைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்பது தெரியவரும்..."

(ஆதாரம்: அமரர் கல்கியின், "யார் இந்த மனிதர்கள்" கட்டுரைத்தொகுதி, வானதி பதிப்பகம். அக்டோபர்1998)

திருவாவடுதுறை ஆதீன முதல்வரிடமிருந்து 'நாவலர்' என்ற பட்டத்தைப் பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சைவப்பணியும், தமிழ்த் தொண்டும் அளப்பரியது.

அந்நியர் ஆட்சியில் துணிவுடன் போராட்ட வீரர் போன்று பணியாற்றி சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுத்த செயற்திறன் மிக்க ஒரு சமுதாயத் தலைவர் அவர்.

சோதனைகளும் வேதனைகளும் மிக்க எமது சமுதாயத்துக்கு இன்று ஒரு நாவலர் தேவை. யாழ்ப்பாண மக்கள் படும் பாட்டை நாவலர் இன்று அங்கு இருந்திருந்தால் பொறுத்திருப்பாரா? வீறுகொண்டெழுந்து உலகெல்லாம் கேட்கக் குரல் கொடுத்திருப்பார்.

இன்று எம்மவர்கள் வெளிநாடுகள் பலவற்றுக்குச் சென்று திருக்கோயில்கள் அமைத்து திருவிழாக்களும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தாயகத்தில் நிலவும் பட்டினி நிலையைப் போக்க என்ன செய்கிறார்கள். ஒரு பிடி அரிசி என்றாலும் அனுப்பி வைத்தீர்களா என்று நாவலர் பெருமானின் ஆத்மா அவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்துக் கேட்கும். நாவலருக்குப் பட்டம் அளித்துப் பெருமை தேடிக் கொண்டது ஓர் ஆதீனம். இன்று தமிழகத்தில் இருக்கும் ஆதீனங்களும் ஏனைய இந்து நிறுவனங்களும், யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் நிலவும் பட்டினிக் கொடூரத்தையும், ஏனைய அவல நிலைமைகளையும் கண்டு ஏன் கண்மூடி மௌனம் சாதிக்கின்றன?

நாவலர் காட்டிய வழியில் ஆகம முறைப்படி சமயக் கிரியைகள் நடத்தக் காத்திருக்கும் - வெளிநாடுகளில் சௌகரிய வாழ்க்கை வாழும் எமது சகோதர சகோதரிகள், இன்று எமது வடகிழக்கு உடன்பிறப்புக்களின் நிலையை எண்ணிப்பார்க்கவேண்டும். நாவலர் கஞ்சித்தொட்டித் தர்மம் செய்தார் என்பதையும் அவர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

"காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர்! அகண்டா காரசிவ
யோகமெனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடைக்கு தையோ!
இன்புற்றிட நாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேரவாரும்! செகத்தீரே!"

என்று தாயுமானவர் பாடினாரே! - மறக்காதீர்கள்.

நாவலர் பெருமான் போற்றிப் பாராயணம் செய்த - வசனநடை எழுதிய கந்தபுராணம் என்ன சொல்கிறது?

"ஏவர் எனினும் இடருற்றனராகி
ஓவில் குறையொன்று உளரேல் அதுமுடித்தற்கு
ஆவி விடினும் அறனே
பாவம் அலது பழியும் ஒழியாதே"

மற்றவர் துயர் களைய எமது உயிர் போனாலும் பரவாயில்லை என்ற உணர்வுடன் வாழ நாங்கள் எல்லோரும் முன்வரவேண்டும். இன்றேல் நாம் நாவலர் பரம்பரை எனப் பறைசாற்ற உரிமையற்றவர்கள்.

கந்தையா நீலகண்டன்
பொதுச்செயலாளர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்.

**எந்த மனிதனின் வாழ்வும் நிரந்தரமாய் இருளில் இருப்பதில்லை. என்றாவது அவன் வழிபடும் தெய்வத்தின் அருளால் ஒளிக்கிரணங்கள் வாழ்வில் சுடர்விடும்: இடர் நீங்கி ஏற்றம் உண்டாகும் திருப்புமுனை தென்படும். அத்தெய்வத்தை சிக்கெனப்பிடித்து கொள்ளவேண்டும். அப்போது விதிவிலகி வெற்றிப் பாதையைக் காட்டும்.**

(திருமுருக கிருபானந்த வாரியார்)

# நாவலரின் மானுட விழுமியங்கள்

*கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்*

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் வரலாற்று நாயகன் ஆகிவிட்டவர். வரலாற்று நாயகன் ஆகிவிட்ட நிலையிலும், தமக்கென ஒரு சரித்திரம் எழுதப்பட வேண்டும் என்ற எண்ணம் தம் சிந்தையில் கொள்ளாதவர். சுயநல வேட்கை சிறிதளவேனும் இல்லாதிருந்தமையே இதற்குக் காரணம் எனலாம். தமக்கொரு சரித்திரம் வேண்டும் என நினைத்திருப்பாரேயானால், தாமே ஒன்றை எழுதியிருக்கலாம். அன்றேல், தமக்குப்பின் யாராவது எழுதுவதற்கு உதவியாகக் குறிப்புக்களையும் பதிவுகளை யுமாவது விட்டுச் சென்றிருக்கலாம், அவ்வாறும் அவர் செய்யவில்லை. எனவே, சரித்திரம் விரும்பும் மனிதர்களிலிருந்து, நாவலர் வேறுப்பட்டுத் திகழ்ந்தவர் என்பது பெறப்படுகின்றது.



நாவலர் ஒரு நீதிமான் எனப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறுவார். பொருள் பொதிந்தது மட்டு மன்றிப் பொருள் மிகுந்ததுமான ஒரு கூற்று அது. நீதியை அணுகுதல் அரிது. நீதி என்பது நெருப்புப் போன்றது. நாவலரை அவர் வாழ்ந்த காலத்தில் அணுகி, அவரின் உள்ளக்கிடக்கையை உள்ளபடி அறிந்தவராக எவரும் இருந்திருக்கவில்லை. அதற்குரிய தகுதி அஞ்ஞான்று வாழ்ந்த எவரிடமாவது இருந்திருக்குமென்பது சந்தேகம்தான். நெருப்பினுள் கையை வைக்க யாருக்குத்தான் இயலும். இதனை உணர்ந்தபடியினாலேயே நாவலரும், தனிமனித இயக்கமாகவே செயற்பட்டார். நிறுவனரீதியிலே செயற்பட நாவலர் முயலவில்லை நிறுவனம் அமைக்கத் தெரியாமல் அவர் இருக்கவில்லை. நிறுவனம் என்று ஒன்று தோன்றும்போது, நீதிநெறியில் நின்று, தம்மைப் போலவே அனைவரும் சிந்திப்பார்கள் என்பது என்ன நிச்சயம் என்றும் நாவலர் எண்ணியிருக்கக் கூடும்.

நீதி எக்காலத்திலும் ஒரே தன்மையது; மாற்றத்திற் குள்ளாகாதது. நியாயம் அவ்வாறானதன்று. பொய்யையும் நியாயித்து நியாயிப்பவரின் சாதுரியத்தினால் பொய்யையும் மெய்போலாகச் செய்யலாம். நியாயவாதம் என்பர். நீதிமான்கள் என்போர், 'பொய் கெட்டு மெய்யானவர்கள்'. அவர்களின் ஒவ்வோர் எண்ணமும் செயலும் உலக நன்மையின் பொருட்டேயாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு, எதையும் நியாயப் படுத்துதலில் துரித வளர்ச்சிகண்ட காலப்பகுதி. ஆங்கிலேய ஆட்சியாளர்களின் வாழ்க்கை முறைகளையும் புதிய நாகரிகத்தையும் அவற்றால் கிடைக்கும் அற்ப உலகியல் அனுகூலங்களையும் ஏற்றுக் கொள்வதற்கும், வழிவழி வந்த தமிழர் பண்பாடுகளையும், பாரம்பரியங்களையும், விழுமியப்பண்புகளையும், வாழ்க்கை முறைகளையும், ஆத்மீக சுதந்திர உணர்வுகளையும் மறைக்கவும், மறுக்கவும், பழித்துரைக்கவும் நியாயம் கண்டுபிடித்த நியாயவாதிகளுக் கெதிராகக் கிளர்ந்தெழுந்து நீதியை நிலை நாட்டத் துணிந்தவர் நாவலர் பெருமான்.

நாவலருக்குப் பின், நாவலரின் பணிகளைத் தொடருவதற்கு நாவலர் பரம்பரை உருவாகியது. இப்படியொரு பரம்பரை தோன்ற வேண்டும்; இன்ன இன்ன பணிகளை ஆற்றவேண்டும்; பரம்பரையினரின் கொள்கைகள், பண்புகள் எவையாக இருத்தல் வேண்டும் என்பன போன்ற குறிப்புக்களையோ, விளக்கங்களையோ விட்டுச் சென்றமைக்கு ஆதாரமில்லை. நாவலர் அவ்வாறு ஏன் செய்தார் என்பது சிந்திக்கற் பாலது.

நாவலரை உள்ளபடி அறிந்தோ, உணர்ந்தோ கொள்வது கடின காரியம். காரணம், நாவலர் நீதியே உருவானவர்; நியாயவாதியன்று. நீதி என்பது ஆதியும் அந்தமுமில்லாத பெருந் தீப்பிழம்பு. எனவே, நாவலருக்குக் கிட்ட நெருங்குவது தன்னிலும் அரிதான தொன்று ஆகும்.

நாவலரின் பணிகள் இலங்கையின் வடபகுதியிலும் தென்னிந்தியாவிலும் நிலைகொண்டிருந்தன. ஆகையினால் இரு பிரதேசங்களையும் சேர்ந்த அறிஞர்கள் சிலர் நாவலரின் சரித்திரத்தை எழுதினர். ஆனால் எதுவும் பூரணத்துவம் பெற்றதாக இல்லை. காரணம், அவர்களால் நாவலரை நெருங்க முடியாமையேயாகும்.

நாவலரின் தமையனின் மகன், த. கைலாசபிள்ளை மற்றும் திருவாளர்கள் வே. கனகரத்தினம், சி. செல்லையாபிள்ளை, வை. முத்துக்குமாரசாமி போன்றோரும், தமிழ் நாட்டைச் சேர்ந்த யோகி சுத்தானந்த பாரதியார், மாயாண்டி பாரதி ஆகியோரும் நாவலர் சரித்திரத்தை எழுதியுள்ளனர் அவர்கள் நாவலரின் சைவசமய மறுமலர்ச்சிப் பண்புகள், தமிழ்ப்பணிகள், கல்விப் பணிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். நாவலரைத் தூரத்தில் நின்று பார்த்தும், அனுமானித்தும், நாவலர் மீதுள்ள அபிமானத்தை காண்பிப்பதற்கு உபசார வார்த்தைகளைக் கொட்டியும் எழுதப்பட்டவை. நாவலர் பற்றிய தப்பெண்ணங்களுக்கும் சில சந்தர்ப்பங்கள் ஏதுவாயின.

பண்டிதமணி இது தொடர்பாகக் குறிப்பிடும் கருத்து உளங்கொள்ளற்பாலது.

"காலப்போக்கில் சரித்திரம் எழுதும் நிலை ஏற்பட்ட போதும், சமயியான நாவலருக்கு – நெருப்புந் தண்ணீருமான நாவலருக்கு – சரித்திரம் எழுதுவது எளிதன்று. சரித்திரக்காரர் கிடைத்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தித் தம் விருப்பங்களையும் புகுத்தி ஒருவாறு எழுதியிருக்கின்றார்கள். வெளிவந்த நாவலர் சரித்திரம் எதுவும் பூரணமானதன்று என்பதே அக் குறிப்பாகும்.

நாவலரின் முழுமையான அகம் புறம் சார்ந்த சரித்திரத்தை எவரும் இதுவரை தந்தனரில்லை. அவரின் மானுடம் தழுவிய, நீதியின்பாற்பட்ட அகப், புறச் சரித்திரத்தைத் தெளியும் போதுதான், அவரின் எதிரிகள் உட்பட அனைவரும் அவரைப் புரிந்து கொண்டு பாராட்டும் நிலை ஏற்படும். நாவலர் எவருக்கும் விரோதியல்ல. மானுடத்தை நேசித்தவர், பூசித்தவர், உபாசித்தவர் என்ற வகையில் மிக உயர்ந்தவர்.

நாவலர், நீதியில் நெருப்பு என்றும், இரக்கத்தில் தண்ணீர் என்றும், பண்டிதமணி குறிப்பிடுவது நாவலரை ஓரளவிற்கேனும் புரிந்து கொண்ட நிலையிலேயேயாகும். நீதியிலும், இரக்கத்திலும் நாவலர், பிறர், தமர் என்னும் பேதம் நீங்கிய நிலையில் இருந்தார்.

நாவலர் சிறந்த நீதிமான், கருணை வள்ளல், மானுடன். "மானுடம் வென்றதம்மா" என்பார் கம்பர். நாவலரின் வெற்றி மானுடத்தின் வெற்றி. நாவலர் ஒரு சமயி. அதனாலேயே நீதிக்கும் மானுடத்திற்கும் மதிப்புத் தந்தார். சைவத்தை ஆராய்ந்தார். உண்மைகள் எவை, போலிகள் எவை என்பவற்றை இனங்கண்டார். சமயப் போலிகளை வெளிப்படுத்தவும், கண்டிக்கவும் தயங்கவில்லை, சைவத்தில் அஞ்ஞான்று நிலவிய குறைபாடுகளையும், போலிச் சைவர்களின் வெளிவேடங்களையும், நியாயம் கற்பிக்கும் நியாயவாதிகளையும், தவறான வாழ்க்கை முறைகளையும் இன்னார், இனியவர் என்று பாராது, நீதி வழி நின்று சாடினார். இங்குதான், நாவலர் நீதியில் நெருப்பாந் தன்மையும்; எல்லோரையும் ஈடேற்ற வேண்டும் என்னும் இரக்கத்தில் தண்ணீராந் தன்மையும் கொண்டு திகழ்கின்றார். நீதி செய்யும் அறக் கருணையும் மறக் கருணையும், உலகத்தவரின் நன்மைக்காகவே என்பது உணர்த்தற் பாலது. நாவலரை ஒரு சமய வெறிபிடித்தவர் என்றும், கடும் போக்காளர் என்றும், மனிதர்களிடையே பேதம் காட்டியவர் என்றும், மாற்றங்களுக்கு நெகிழ்ந்து கொடாத பிற்போக்காளர் என்றும் விமர்சிப்பவர்கள், நாவலரின் உண்மைநிலையை உணராதவர்களே யாவர். நாவலர், ஒரு மானுடன்; மானுடத்தின் மீட்புக்காகப் போராடுவது என்பது மனித உரிமைப் போராட்டம். நாவலர் செய்தது இதனைத்தான். இதனை உணர்ந்து கொண்ட எவரும் நாவலரைச் சரியாகவே மதிப்பிடுவர்; தவறாக எடை போடமாட்டார்கள்.

நாவலரை, ஒரு சைவசமய மறுமலர்ச்சியாளராகவோ, தமிழபிமானியாகவோ, கல்வியியலாளராகவோ சமூக சீர்திருத்த வாதியாகவோ கூறு போட்டுப் பார்ப்பதினால் நாவலரின் முழுமையை அறிந்து விட முடியாது நாவலரைஒரு மானுடனாகக் கண்டு கொள்ள முயல்பவர்களாலேயே, அவரின் முழுமையை ஓரளவிலாவது அறிந்து கொள்ள முடியும். அதற்கு மேலும் மேலும் ஆய்வு தேவை.

இச்சந்தர்ப்பத்தில், நாவலர் பரம்பரையினர் பற்றிச் சில அறிஞர்கள் தரும் வரைவிலக்கணத்தை நோக்குவோம். "நாவலர் பரம்பரையினை நோக்கும் போது இலக்கிய இலக்கண நூற்புலமை, கல்விப்பணி, நூல்வெளியீடு, சைவசமய பிரசாரம், பிறமத கண்டனம், பிரசங்கமுறை, புராண படனம், அருட்பாக் கோட்பாடு என்பனவற்றை முக்கியமானவையாக இனங்காட்ட முடியும்." என அது அமைகின்றது. நாவலர் பரம்பரையினர் எனக் கூறுபவர்களிடத்தில் மேற்கூறிய பண்புகள் யாவுமோ அல்லது சிலவோ இருக்கக் காணலாம். கண்டதிலிருந்து காணாததை அறிதல், அறிந்ததிலிருந்து அறியாததைத் தெரிந்து கொள்ளுதல் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் நாவலர் பரம்பரையினர் எனக் கூறிக் கொள்பவர்களின் செயற்பாடுகளிலிருந்து, நாவலரை அறிந்து கொள்ள முயன்றமையில்தான் தவறு ஏற்பட்டுள்ளது.

*"தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
*எச்சத்தாற் காணப்படும்"* என்பது வள்ளுவர் வாக்கு.

நாவலர் தமது 'எச்சம்' என எவரையும் குறித்து வைத்ததாக இது வரைகண்டு பிடிக்கப்படவில்லை. அவ்வாறு "எச்சம்" ஒன்று தனக்குப்பின் இருக்கவேண்டும் என எண்ணியவராகவும் இல்லை. இந்நிலையில், 'எச்சம்' என்று கூறப்பட்டவர்களின் செயற்பாடுகளைக் கொண்டு, நாவலர் பெருமானை தக்கவர் என்றோ, தகவிலர் என்றோ எவ்வாறு மதிப்பீடு செய்ய முடியும் என்று வினா எழத்தான் செய்கின்றது. 'எச்சத்தினர்' நாவலரின் உள்ளக்கிடக்கையை உள்ளபடி அறிந்து வைத்திருந்தனர்தானா என்பது மற்றொரு வினாவாகவும் உள்ளது. புற நடையும் உண்டு என்பதையும் கூறத்தான் வேண்டும்.

நாவலரைப் பற்றி அவருக்குப்பின் வந்தோர் அறிந்து கொண்டது கைம்மண்ணளவு என்றால், அறிந்து கொள்ளாதவை உலகளவு எனலாம். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நாவலரின் உள்ளக் கிடக்கையை, மானுடம் நுதலிய பணிகளை உள்ளவாறு அறியவும், உணரவும் முயன்றவர். அவற்றில் ஈடுபாடு கொண்ட ஏனையோரையும் ஊக்குவித்தவர். நாவலர் பணிகள் சிலவற்றை ஆதாரபூர்வமாக ஆய்வு செய்து கண்டுபிடித்தவர் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர், காலஞ்சென்ற ச. தனஞ்சயராச சிங்கம் ஆவார். தாம் கண்டு பிடித்தவற்றை "நாவலர் பணிகள்" எனும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார்.

அந்நூலின் அணிந்துரையில், பண்டிதமணி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"1848த் தொடங்கி வாரந்தோறும் நாவலர் செய்த பிரசங்கம் ஒவ்வொன்றுக்கும் இருபது இறைசால் விலைபேசிய உதயதாரகையின் விளம்பரப் புதினம்; கஞ்சித் தொட்டித் தருமம் என்கின்ற கண்ணீர்; இலங்கைச் சட்ட நிரூபண சபைப் பிரதிநிதித் தெரிவு என்கின்ற நெருப்பு; கல்வித் திட்டங்கள் ஆகிய விளக்குகள்; உதவி நன்கொடை பெறுவதற்கு நேர்ந்த இடறு கட்டைகள்; விவசாயம், வர்த்தகம் என்கின்ற நாட்டை வளம் படுத்தும் வாழ்க்கை வழிகள் என்றிவைகளும் பிறவுமாக இப் புத்தகத்திற் காட்டப்பட்டவைகள், விரிந்த நாவலர் சரித்திரத்தில் புதிய அத்தியாயங்கள் அமைதற்கு நல்ல வித்துக்களாம்."

நாவலரின் மானுடத்தை விளக்கும் ஒருசில செயற்பாடுகளை நோக்குவோம்.

1876 ஆம் ஆண்டு நாட்டில் மழை பொய்த்தது. நீரின்மையால் நெல்விளைச்சல் இல்லை. பெரும் பஞ்சம் ஏற்பட்டது. ஆடு, மாடுகளும் நீரும் புல்லும் இன்றி வாட்டம் கண்டன. கொள்ளை நோயும் பற்றிக் கொண்டது. உணவுப் பொருட்களின் விலை

உயர்ந்தது. மக்கள் தானிய உணவினை விலக்கிப் பனம் பழங்களை உண்டனர். ஆனால் முன்பு அரைச் சதமாய் விலைப்பட்ட பனங்காய் ஒன்று, இவ்வாண்டில் பஞ்சத்தின் நிமித்தம் மூன்று அல்லது நான்கு சதம் வரை விலைப்பட்டது. இவ்வாறு அக்காலத்து வெளிவந்த "இலங்கை நேசன்" பத்திரிகை செய்தி வெளியிட்டது. மக்கள் பஞ்சத்தினாலும், கொள்ளை நோயினாலும் படுந் துன்பம் கண்டும் அக்கால ஆங்கிலேய ஆட்சியாளர் நிவாரணம் வழங்காது சும்மா இருந்தனர். ஆனால் மானுட நேயமும், இரக்கமும் கொண்ட நாவலர் பெருமானால் அவ்வாறிருக்க இயலவில்லை. மக்களின் பசித் துயர் துடைக்கும் பணியில் தம்மை அர்ப்பணித்தார். ஊர்கள் தோறும் கஞ்சித் தொட்டிகள் அமைக்கப் பெற்றன. நாவலரே முன்னின்று நடத்தினார். சமய சாதி வேறுபாடின்றி எல்லோரினதும் உதவிகளையும் பெற்றுக் கொண்டார். அவ்வாறே, ஏழைமக்கள் யாவரும் நன்மைபெற்றனர். இக் கைங்கரியத்தில், நாவலருடன் இணைந்து உழைத்தவர், கி. பிறிற்றோ எனும் கிறீத்தவப் பெரியார் ஆவார். கஞ்சித் தொட்டித் தருமத்தின் மூலம் அன்றைய சமுதாயத்தில் காணப்பட்ட சாதி, சமூக, சமய, ஏற்றத்தாழ்வுகளை அகற்றவும், ஒன்றுபட்ட சமுதாய உணர்வினை ஏற்படுத்தவும் நாவலர் பாடுப்பட்டார்.

நாவலரின் மற்றொரு சமூகசேவை, திருகோணமலையை அண்டியுள்ள கந்தளாய்ப் பிரதேசத்தை அரசினரிடமிருந்து பெற்று, இலங்கை வாழ் மக்களுக்கு வழங்கி நெல் வேளாண்மையில் அவர்களை ஈடுபடுத்துவதாக இருந்தது. சமூக நன்மையின் பொருட்டு, நாவலர் விவசாயப் பிரசாரகராகவும் செயற்பட்டார். யாழ்ப்பாணம் – மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம் நாவலரின் முயற்சியால் நிறுவப்பட்டது. ஆங்கிலேய துரைத்தனத்தாரும் கம்பனிகளுமே பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையிலும், வியாபாரத்திலும் ஈடுபட்டு வந்த காலம், சுதேசிகள் முடங்கிக் கிடந்தனர். அவர்களைத் தட்டி எழுப்பித் தம் நாட்டவர் நெற் செய்கையிலாவது ஈடுபடவேண்டும் என்று கருதிய நாவலர், பலமுயற்சிகளை மேற்கொண்டார். சாதி, சமயத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் நின்று நாவலர் பணி புரிந்தார் என்பது 1877, 1878 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த இலங்கை நேசன் பத்திரிகைச் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

1876 ஆம் ஆண்டுப் பஞ்சத்தின் பின் யாழ்ப்பாண உழவர்கள் விதைநெல் இன்றிக் கஷ்டப்பட்டனர். நாவலரின் பெருமுயற்சியால், ஆங்கிலேய அரசிடமிருந்து விதை நெல் பெறப்பட்டது. ஆனால் அப்போதைய வடமாகாண அரசாங்க அதிபர் துவைனன் துரை, மக்களுக்கு விதைநெல் வழங்காமை கண்டு நாவலர் பொங்கியெழுந்தார். துவைனன் துரையினால் உழவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிபற்றியும், அவரின் வேறு பல ஊழல்கள் பற்றியும் பகிரங்கமாகக் கண்டித்ததுடன், இலங்கைத் தேசாதிபதிக்கு, அவரை வேறிடத்திற்கு மாற்றி விடும்படி விண்ணப்பமும் செய்தார்.

1850 ஆம் ஆண்டில், வண. பீற்றர் பேர்சிவல் அடிகளாரின் வேண்டுகோளுக்கிணங்க, விவிலியம் எனப்படும் புனித பைபிள் நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர், நாவலர். "நாவலர் இப் பணியினால், தமிழ் வசனநடை வளர்ச்சிக்கு மட்டுமல்ல, கிறீத்தவ வேதவளர்ச்சிக்கும் அருந்தொண்டு புரிந்துள்ளார்," என இலங்கையின் முன்னைநாள் கிறீத்தவ அத்தியட்சகர் ஒருவர் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

நாவலர் ஒரு மானுடன். மனிதாபிமானம், மானுடநேயம், மனிதகுல நல நாட்டம், அனைத்துலகநோக்கு, மனிதத்துவ உணர்வு என்பவற்றைக் கொண்டிருந்தவர் என்பது மேலும் மேலும் அவர்பற்றி ஆயும் தோறும் தெளிவாகும். நாவலரை ஒரு குறுகிய வட்டத்தினுள் வைத்து மதிப்பிடுவது தவறு. நீதி கேட்பதில், நடுவுநிலைமை தவறாமையில் அவர் மிகவும் கண்டிப்பானவர் இதில் தமர், பிறர் எனப் பார்ப்பதில்லை. நீதி நெறி தவறியவர்கள் நாவலருக்கு அஞ்சியமை உண்மை. ஆனால் மனிதகுலம் படுகின்ற வேதனைகள், துன்பங்கள், அடிமைத்துயர்கள் ஆகியவற்றைத் தணிப்பதில், நாவலர், இரக்கம், அன்பு, கருணை, ஆர்வம் ஆகியவற்றின் வடிவமாகவே விளங்கினார். நாவலரின் மானுட விழுமிய உணர்வுகளின் அடிப்படையில், அவரின் பணிகள் நோக்கப்படும்போதுதான், நாவலரின் உண்மைச் சரித்திரம் முழுமை பெறும். அப்பொழுதுதான் ஆறுமுக நாவலரை உலகத்தவர் ஒருமுகமாகப் போற்றுவர்.

## மாமன்றத்தின் அனுதாபம்

தீவிர இறைபக்தரும், சமய ஆர்வலருமான வி. கந்தசாமி அவர்களின் மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

மாமன்றத்தின் முகாமைப் பேரவை உறுப்பினரான வி. கந்தசாமி இலங்கை மின்சார சபையில் உயர் பதவி வகித்தவர். மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனமான திருக்கேதீஸ்வரம் திருப்பணிச் சபையின் துணைத் தலைவர்களுள் ஒருவராகவிருந்ததுடன், சபையின் பிரதிநிதியாக மாமன்றத்துடன் இணைந்து பெரிதும் உதவிவந்தவர். மாமன்றத்தின் நிர்வாகத்திலுள்ள இரத்மலானை மாணவர் விடுதிக்கு கிடைத்த இவரது பங்களிப்பு என்றென்றும் மறக்க முடியாதது.

இவரது பிரிவால் துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு மாமன்றத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இக்காலத்திய இளைஞர்களில் பலருக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. கடவுள் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே அவர்கள் அம்முடிவுக்கு வந்து விடுகின்றனர். பகல் வேளையில் வானத்தில் நட்சத்திரங்கள் தென்படுவதில்லை. ஆதலால் அப்பொழுது வானத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று நாம் முடிவு கட்டலாமா? நமது சித்தத்தினுள் கடவுள் வீற்றிருக்கிறார். நமது அறியாமையினால் அவருடைய சான்னித்தியத்தை நாம் உணர்வதில்லை.

(சுவாமி சித்பவானந்தர்)

# ஆறுமுக நாவலரும் வடமொழியும்

- ம. பாலகைலாசநாத சர்மா
வடமொழித்துறை விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

19ம் நூற்றாண்டு இலங்கையில் ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சியின் தந்தையெனக் கருதப்படும் ஆறுமுகநாவலர் (1822 – 1879) தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார். இம்மொழிகளில் ஒன்றான வடமொழியில் ஆறுமுகநாவலர் எத்தனை உணர்வு கொண்டிருந்தார் என்பதை ஓரளவு எடுத்துக் காட்டுவதே இச்சிறிய கட்டுரையின் உள்ளடக்கமாகும்.

## ஆறுமுக நாவலருக்கு தேவைப்பட்ட வடமொழி அறிவு

நாவலரின் பிரதான பணியான சைவசமய திருப்பணியின் பெரும் பயனாகவே தமிழும் அக்காலத்தில் நன்கு வளம் பெற்றது. குறிப்பாக நாவலரின் சைவசமய திருப்பணியுடனேதான் அவரின் வடமொழி உணர்வும் பெரிதும் நோக்க வேண்டியுள்ளது. இந்து சமயத்தின் பிரதான பிரிவுகளில் ஒன்றான சைவசமயத்திற்கு புத்துயிர் அளித்து மறுமலர்ச்சியை ஏற்படுத்திய நாவலர் பெருமான் வடமொழியில் நன்கு ஈடுபாடு கொண்டிருந்தார் எனலாம். ஏனெனின் வடமொழியின் சிறப்பும், தொன்மையும், ஆளுமையும், தேவையும் சமய, சமூக பண்பாட்டு அம்சங்களோடு பிரிக்க முடியாத அளவு அதிகமான செல்வாக்குப் பெற்று வருகின்றது.

## வடமொழி அறிவின் அவசியம்

தமிழறிஞர்கள், பொதுவாகவே வடமொழியிலும் ஓரளவு பாண்டித்தியம் பெற்றிருந்தனர். யாழ்ப்பாணத்திலே நீண்ட காலமாக ஒரு வடமொழி பாரம்பரியமும் நிலவி வருகின்றது. வடமொழி அறிவு சைவசமயம், தமிழ் ஆகியனவற்றை நன்கு பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு மட்டுமன்றி, அதன் தொல் சீர் இலக்கியங்களைக் கற்று விளங்கிக் கொள்வதற்கும் அவசியமெனக் கருதப்பட்டது. இதனால் தமிழ் அறிஞர்களுக்கு தமிழ் இலக்கண இலக்கிய அறிவு மட்டுமன்றி, வடமொழி இலக்கண இலக்கிய அறிவும் ஓரளவு அவசியம் என்ற கருத்து நிலவிற்று. எனவே நாவலர் வடமொழிகளைச் சமய நோக்கிற்காக மட்டுமன்றி தமிழை நன்கு விளங்கிக் கொள்ளவும் வடமொழி இலக்கியத்தை அறியவும் கற்றிருப்பார் எனலாம்.

## ஆறுமுக நாவலரின் வடமொழி அறிவு

ஆறுமுகநாவலரின் வாழ்க்கை வரலாறு பற்றி எழுதியவருள் ஒருவரான த. கைலாசபிள்ளை தனது நூலில் பின்வருமாறும் கூறுகின்றார். ஆன்மாக்கள் பொருட்டுச் சிவபெருமான் அருளிச் செய்த முதனூல்கள் வேதசிவாகமங்கள் என்றும், அவைகளுள் வேதம் பொது நூலென்றும் ஆகமச் சிறப்பு நூலென்றும் அறிந்தார். அறியவே சிறப்பு நூலாகிய சிவாகமத்தைக் கற்பதற்கு வடமொழி அவசியம் வேண்டியிருந்ததனால் அதனைப்படிக்க முயன்று சிறிது நாள்களுக்குள் வடமொழி நூல்களை வாசிக்கவும் அவற்றின் பொருளை நன்கு விளங்கிக் கற்றுக் கொண்டார். எனவே, சைவசமயத்தினை அதன் மூல நூல்களில் அறியும் ஆவல் கொண்டிருந்த நாவலர் வடமொழியிலே அதிக கவனம் செலுத்தினார். தமிழிலும், வடமொழியிலும் உள்ள சைவ சமய நூல்களை அம்மொழிகளிலேயே கற்பதன் மூலம் உள்ளாந்தத்தினை நன்கு அறிய முடியுமென்பது அவருக்கு நன்கு புலனாயிற்று. எனவே நாவலர் சைவத் திருமுறைகளும், சைவசித்தாந்த நூல்களும், வேதாகமங்களையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அவற்றை நன்கு விளங்கிக் கொள்வதற்காகவே அவர் வடமொழி அறிவின் அவசியத்தை உணர்ந்து செயலாற்றினார் எனலாம்.

## வடமொழி வளத்திற்கு நாவலரின் பங்களிப்பு


இந்தியாவைப் பொறுத்தவரையிலே வடமொழியின் நிகரற்ற நிலையினை அவர் ஏற்றுக் கொண்டிருந்தார் என்பது "சைவ தூஷண பரிகாரம்" என்று நூலில் "அதுல சம்ஸ்கிருத பாஷாண மோங்கி விளங்கா நின்ற புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலே" எனக் குறிப்பிட்டதிலிருந்து தெளிவாகும். பரத நாட்டின் பொதுவான பண்பாட்டு மொழியாகவும், இந்துக்களின் புனித மொழியாகவும் தொன்மையான இலக்கிய வளமும், சிறப்பும் கொண்ட மொழியாகவும் வடமொழி விளங்கி வந்துள்ளமை குறிப்பிடற்பாலதே என்பதை நாவலரும் நன்கு மனத்திற் கொண்டார்.

நாவலர் பெருமான் வடமொழி அறிவினை பரவலாக்கி முயற்சித்தார் என்பது அவர் மேற்கொண்ட பிறிதோர் நடவடிக்கையாலும் தெளிவாகின்றது. அவர் தொடங்கி முற்றுப் பெறாத நூல்களில், "சமஸ்கிருதம் – தமிழ் அகராதியும், ஸம்ஸ்கிருத வியாகரணசாதமும்" கூறப்பட்டுள்ளன. துரதிஷ்ட வசமாக இவ்விரு நூல்களும் முற்றுப் பெறவில்லை. இவ்விரண்டும் புதிய முயற்சிகளாகவே காணப்படுகின்றன.


1870 களிலே தாம் நிறுவிய சைவப் பிரகாச வித்தியா சாலையின் பாடத்திட்டத்திலே நாவலர் வடமொழிக்கும் ஓர் இடம் அளித்துள்ளமை குறிப்பிடற்பாலது. இம் மொழியினை புகட்டுமாறு உரியவர்களுக்கு விண்ணப்பஞ் செய்தார்.

சிதம்பரத்திலே நாவலர்பெருமான் அமைக்கவிருந்த வேதாகமக் கல்வி நிலையத்தில் இடம்பெற வேண்டியோரில் வடமொழி ஆசிரியர் ஒருவரும், வேதாகமப் பண்டிதர் ஒருவரும் அடங்குவர் என தனது கல்விச் சிந்தனைகளில் வடமொழிக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

சமகாலத் தேவைகளுக்கு ஏற்ப மூலநூல்களில் இருந்தும், வழிநூல்களிலிருந்தும் தேவையான இடங்களிலே மேற்கோள் களுடனும் தமது கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார். வடமொழி நூல்களைப் பின்பற்றி தமிழிலே தனிப்பட்ட நூல்களும், கட்டுரைகளும் எழுதியும், பிரசங்கம் செய்தும் மக்களுக்கு சமயபோதனைகள் செய்து சமய உணர்வினையூட்டினார். வைதிக சமயங்களில் ஒன்றான சைவத்தினை புத்துயிர் பெறச் செய்தவரான ஆறுமுகநாவலர் தனது சிந்தனைகளிலும், பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும், கண்டன பிரசாரங்களிலும், மறுப்புரைகளிலும் தனது வடமொழி அறிவினையும் பயன்படுத்தி சைவசமய மறுமலர்ச்சியின் தந்தையெனவும் சிறப்பிக்கப்பட்டு நாவன்மையாளர் ஆறுமுகநாவலர் எனும் பெருமையும் பெற்றார்.



# நந்தியும் இந்து சமயமும்



- என். இராசரெத்தினம் - B.A. (Cey), P.G.D.E.M., SLPS1
SP.Trd. (Sc) NEIPA. (Mgt.)
*(ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்)*

இந்து சமயம் மிகவும் பழைமை வாய்ந்த ஒன்றாகும். இந்து மதத்தின் வரலாறு இருக்கு வேதத்தில் உள்ள மந்திரங்கள் என்னும் தோத்திரங்கள் இயற்றப்பட்ட காலத்தில் இருந்து ஆரம்பமாகிறது. இது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டதாகும். ஆய்வாளர்களின் ஆய்வின் பிரகாரம் இக்காலம் கி.மு.5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகவிருக்கலாம் என உத்தேசமாகக் கூறப்படுகிறது.

உலகத்தில் முதன் முதலிற்தோன்றிய நூல் "இருக்குவேதம்" என்பதை ஆய்வாளார்கள் ஏற்றுக் கொள்வதால் இந்து மதத்தின் உலகளாவிய இயல்பு 'உலகத்தில் முதன் முறையானதென்பதும் காலத்தால் முந்தியதென்பதும் குன்றின் மேல் விளக்கு. இந்து மதத்திற்கு "வேதாந்த மதம்" என்னும் பெயரும் வழங்கப்படுகிறது.

சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் உப பிரிவுகளை இந்து மதம் தன்னகத்தே கொண்டுள்ளது. சைவமதத்தின் முழுமுதற் கடவுளாக மிளிர்பவர் சிவபெருமான் ஆவர். சிவபெருமானின் வாகனமாக விளங்குவது நந்தியாகும். 'இப்படியன், இந்நிறத்தன் இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே' என திருநாவுக்கரசரால் இறைவனின் இயல்பு பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பினும், ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக, இறைவன் உருவம், அருவம், அருவுருவம், என்னும் தோற்றங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளான். உருவநிலை கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனின் வாயில் காப்போனாகவும் விளங்குபவர் நந்திதேவர் ஆவர். நந்திதேவரை வழிபட்டு சைவமதத்தின் முழுமுதற் கடவுளாக விளங்கும் சிவபெருமானை வணங்குதல் நியதியாகும்.

சிவன் கோயில்கள் பல இலங்கையில் உள்ளன. மட்டக்களப்புக் கொக்கட்டிச்சோலையில் உள்ள தான்தோன்றீஸ்வரர் கோயிலும் இலங்கையில் உள்ள பிரசித்தி பெற்ற சிவன் கோயில்களுள் ஒன்றாக விளங்குகிறது. இக்கோயிலில் போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்ட காலப்பகுதியில் (கி.பி. 1505) நிகழ்ந்த அற்புத சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுவது சாலவும் பொருத்தமுடையதாகும்.

இக்கோயிலில் சிறந்த சிவபக்தராக விளங்கிய கோயிற் குருக்கள் பூசை செய்து கொண்டிருந்த வேளையில் போர்த்துக்கேயத் தளபதி குதிரையில் வந்து இறங்கி, பாதவணியுடன் கோயிலுக்குட் சென்றான். தளபதியைக் கண்டதும் கோயில் குருக்கள் பயமடைந்தார். தளபதி குருக்களை நோக்கி யாது செய்கிறாய் எனக் கேட்டவுடன் தான் பூஜை செய்வதாகப் பதட்டத்துடன் அவர் அவனிடம் கூறினார். கல்லிற் செய்த மாட்டுக்குப் பூசையா என வினாவிய தளபதிக்கு முழுமுதற்கடவுளான சிவபெருமானின் வாகனம் நந்தி எனக் குருக்கள் கூறினார். "இந்த நந்திக்குப் புல்லைக் கொடு, சாப்பிடுகிறதா" எனத் தளபதி ஏளனமாகக் கூறினான்.

தடுமாறிச் செய்வதறியாத குருக்கள் இச்சோதனையில் இருந்து தன்னைக் காப்பாறுமாறு இறைவனை பக்தியுடன் வேண்டினார். கோயிலுக்குச் சமீபத்திற் காணப்பட்ட குளத்தடியில் வளர்ந்திருந்த புல்லை வெட்டிக் கொண்டு வந்து குருக்கள் மிகப் பக்தியுடன் நந்தியின் வாய்க்குச் சமீபத்தில் கொண்டு வந்தார். நந்தி உயிர் பெற்று விளிப்படைந்தது. தனது முன்னால் கால்களை ஊன்றிய நந்தி அப்பகுதி முழுவதும் எதிரொலிக்கும் வண்ணம் ஒலி எழுப்பி குருக்களால் கொடுக்கப்பட்ட புல்லை வேகமாகச் சாப்பிட்டது. சிறிது நேரத்தில் சாணத்தையும் இட்டது.

கோபமடைந்து விளங்கிய நந்தி பக்கத்தில் நின்ற தளபதியை நோக்கிக் கோபாவேசத்துடன் பாய்ந்தது. தான் எதிர் பாராதவிதத்தில் இந்நிகழ்வு நடைபெற்றதைக் கண்ணுற்ற தளபதி மிகுந்த பயத்துடன் தன்னை மன்னித்துக் கொள்ளும்படியும் நந்தியிடமிருந்து தன்னைக் காப்பாற்றும்படியும் கெஞ்சினான். நந்தியைக் குருக்கள் பணிவுடன் வணங்கி அதனது சீற்றம் பணியுமாறும், தளபதிக்கு யாதும் செய்யவேண்டாம் எனவும் கெஞ்சினார். நந்தி குருக்களின் வேண்டுதலை ஏற்றுக்கொண்டு கோபந்தணிந்து காணப்பட்டது. தான்வந்த குதிரையின் மீது ஏறியதளபதி, கோயிலை விட்டு அகன்றான்.

தன்னுடைய கடமைப்பாட்டில் இருந்து நழுவிய நந்தி தேவருக்குச் சிவபெருமான் சாபமிட்ட சம்பவமும் பரஞ்சோதி முனிவரால் அருளப்பட்ட திருவிளையாடற் புராணத்தில் "வலைவீசியபடல"த்தில் விளக்கப்பட்டுள்ளது. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதப்பொருள்களையும் உலக மாதாவாகிய உமாதேவியாருக்கு சிவபெருமான் உரைத்த வேளையில், இறைவி புலன்செலுத்தாத காரணத்தால் பிள்ளை கேட்டுத் தவம்புரியும் பரதவாசனுக்கு மகளாகப் பிறக்கும்படி சபித்தார். கைலயங்கிரிக்கு வருகை தந்து தாயைக் காணாததால் கோபமுற்ற முருகப் பெருமானுக்கு, மதுரையில் உருத்திரசருமா என்னும் ஊமைப்பிள்ளையாகப் பிறக்கும்படி சாபமிட்டார். அங்கு வருகைதந்த விநாயகப் பெருமான் அங்கிருந்த வேத ஏடுகளையெல்லாம் எடுத்துக் கடலில் வீசினார். தன்னுடைய வாயில் காப்பபோனான நந்திதேவர் இவர்கள் இருவரையும் உள்ளே அனுமதித்தமைக்காக சுறாமீன் வடிவங்கொண்டு கடலில் மரக்கலங்களில் மோதித்திரியுமாறு சாபமிட்டார், "வலை வீசிய படலத்தில்" (திருவிளையாடற் புராணப்பிரிவு), இறைவன் இச்சுறாமீனைப் பிடித்து, நந்தி தேவரின் முந்திய உருவத்தை வழங்கியமை குறிப்பிடத்தகுந்தது.

சிவ ஆலயங்களிலே பலிபீடத்தருகே நந்தியின் உருவம் இறைவன் எழுந்தருளியிருக்கும் மூலத்தானத்தை நோக்கிய வண்ணம் உள்ளதையும் அர்ச்சகர் பலி பீடத்தில் பலி ஒப்புவித்துப் பூசை மேற்கொள்ளும்போது நந்திக்கும் தூப, தீபங்கள் காட்டிப் பூசை பண்ணுவதால், நந்தியின் முக்கியத்துவம் உணரப்படுகிறது, அத்துடன் வெளிக்காட்டப்படுகிறது.

இந்து மதத்தின் முக்கிய கூறாக விளங்கும் சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் வாகனமாக விளங்கும் நந்தியின் கொடி அகில உலகரீதியாக விளங்கும் இந்து மதத்தின் கொடிச் சின்னமாக முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது. இதனை உலகளாவிய ரீதியில் விளம்பரப்படுத்தும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி நந்திக் கொடிகளைச் சிறந்த முறையில் தயாரித்து வழங்கும் திரு. சின்னத்துரை தனபாலாவின் சேவை பெரிதும் பாராட்டுதற்குரியது.

வாழ்க அன்னாரின் சேவை! வளர்க இந்து மதப் பணிகள்!

# மார்கழி மாதச் சிறப்பும் திருவெம்பாவையும்

*திருமதி கௌசலாதேவி சிதம்பரேஸ்வரன்*
*ஆரம்ப பிரிவுத் தலைவர், விவேகானந்தா கல்லூரி, கொழும்பு–13.*

"மாதங்களில் மார்கழி மலர்களில் மல்லிகை" என்று சிறப்பித்துக் கூறப்படும் மார்கழி மாதமானது பல சிறப்புக்களைக் கொண்ட மாதமாகும். பொதுவாக நோக்கும்போது இம்மாதத்திலேயே பல சமய நிகழ்வுகள் இடம் பெறுகின்றன எனலாம். ஆருத்திரா தரிசனம், விநாயகர் சஷ்டி, மார்கழி நீராடல், சுவர்க்கவாயில் ஏகாதசி, திருவெம்பாவை நிகழ்வு பத்து நாட்கள், வீடுகளில் மார்கழி மாதத்தில் வாசலில் கோலமிட்டு சாணத்தால் பிள்ளையார் பிடித்து அறுகம்புல் வைத்து மங்களம் உண்டாக்குதல் என்பன சிறப்பாக இடம்பெறும் நிகழ்வுகள் ஆகும்.

இம்மாதத்தில் பனியும் குளிரும் அதிகம். அதனையும் லட்சியம் செய்யாது மக்கள் அதிகாலையில் எழுந்து நீராடி இறைநாமம் உச்சரித்து பஜனை செய்து கொண்டு கூட்டம் கூட்டமாக செல்வார்கள். எங்கும் பக்திமயம், எங்கும் பக்தி வெள்ளம். காண்போரை எல்லாம் இறைவன்பால் ஈர்க்கும் மயமாகவே காணப்படும்.

பஜனைப் பாடல்களின்போது கிராமங்களிலும் சரி நகரங்களிலும் சரி, மக்கள் பாடிக் கொண்டு செல்வார்கள். இப்பாடல்களில் சிறப்பாக, குறிப்பாக திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் இடம் பெறும். அவற்றுக்கு ஓர் தனிச் சிறப்பு உண்டு. இதனால் எல்லோர் மனதிலும் மங்களமுண்டாகும். இன்று இவ்வாறு அதிகாலையில் எழுந்து நீராடி பக்தி பரவசமாக பஜனைப் பாடிக் கொண்டு செல்வது குறைந்தாலும் ஆங்காங்கே காணப்படத்தான் செய்கின்றது.

காஞ்சி காமகோடி பீடத்து ஸ்ரீ சங்கராசாரியார் அவர்கள் இவை இடம் பெற வேண்டும் என்று வற்புறுத்திக் கூறியுள்ளார். இந்த வழக்கம் ஒவ்வொருவரிடமும் மறைந்திருக்கும் ஆத்ம சக்தியை எழுப்பக் கூடியது. இவ் வழக்கத்தை மறுபடியும் உயிர்ப்பித்தால் ஆண்டவனது அருள் பெற்று நாமும் சேமமுறலாம். சமுதாயமும் நலம் அடையும் என்பது சுவாமிகளின் அபிப்பிராயம் ஆகும்.

மார்கழி மாத விழாக்களில் சிவன் கோயில்களிலும், பெருமாள் கோயில்களிலும் முறையே திருவெம்பாவை, திருப்பாவைப் பாடப் பெறுவதைப் பலரும் அறிவர்.

*"மார்கழி மாதம் திருவாதிரை நாள்*
*வரப்போகுது ஐயே!"*

என்று நந்தனார் சரித்திரக் கீர்த்தனைப் பகுதியில் பாடப்பட்டுள்ளமை நாம் அறிந்ததே.

திருவாதிரை சிவபெருமானுக்குரிய நட்சத்திரம். சிவபெருமானை ஆதிரையான் என்றும் திருவாதிரையான் என்றும் கூறுவதுண்டு. திருவோணம் திருமாலுக்குரிய நட்சத்திரம் என்றும் திருமாலைத் திருவோணத்தான், ஓணத்தான் என்றும் கூறுவார்கள்.

இலங்கையிலும் சரி, இந்தியாவிலும் சரி சிவதலங்களில் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானுக்கு திருவெம்பாவை நிகழ்வுகள் விசேடமாக நடைபெறுவதும், திருவாதிரை நன்நாளில் இறைவன் வீதி உலா பவனிவருதலும் கண்கொள்ளாக் காட்சியாகும். திருவெம்பாவையின் பத்து நாட்களும் இருபது பாடல்களும் ஓதப்பட்டு தீபாராதனை நடத்தப்படும்.

ஈழ மணித்திருநாட்டு தமிழறிஞர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் மார்கழித் திருவாதிரைக்கு முதல் ஒன்பது நாளும் ஆன் மார்த்தம், பரார்த்தம் என்னும் இரண்டிலும் திருவெம்பாவையே ஓதல் வேண்டும்; திருவாதிரையிலும் திருவெம்பாவையை ஓதிப் பின் வழக்கப்படி தேவாரம் முதலியன ஓதல் வேண்டும் என்று கூறியுள்ளார். இவ்வளவு பெருமையும் மார்கழி மாதத்திற்கும், அங்கு விசேடமாக இடம்பெறும் திருவெம்பாவை சிறப்பிற்கும் எடுத்துக் காட்டாகும்.

இயற்கையான பருவகாலங்கள் இருபெரும் பிரிவு. ஒன்று கோடை, மற்றையது மாரி எனலாம். இதனை ஆறு பருவகாலங்களாக வகுப்பதும் உண்டு. இளவேனில், முதுவேனில், கார், குதிர், முன்பனி, பின்பனி என வகுப்பதும் உண்டு. எப்படிப் பார்த்தாலும் குளிர்காலத்துடன் சேர்ந்ததாகவே இம் மார்கழியும் காணப்படுகின்றது. பசுமை நிறைந்து காணப்படும்.

சைவமும், வைணவமும் இந்து மதத்தின் இருபெரும் பிரிவுகள். இவற்றை இந்து சமயத்தின் இரண்டு கண்கள் என்று குறிப்பிடலாம். அதேபோல இரண்டு பாவைப் பாட்டுக்களையும் இரண்டு கண்மணிகளாக மதிக்க வேண்டும். இவை சிவன் கோயிலிலும் பெருமாள் கோயிலிலும் மார்கழி மாதத்தில் அதிகாலை வேளையில் பாடப்படுகின்றன. மார்கழி மாதத்தில் குளிர் வாட்டும் போதும் மக்கள் மனதில் இறைசிந்தனை, ஆன்மீக உணர்வு என்பவற்றை அதிகாலை தொடக்கமே தோற்றுவித்து இறைவன்பால் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றது எனில் அது மிகையாகாது.

திருவெம்பாவையில் இருபது பாடல்களும், திருப்பாவையில் முப்பது பாடல்களும் உண்டு. இந்த இரண்டு பிரபந்தங்களிலும் முற்பகுதியில் துயில் எழுப்பும் பாடல்கள் காணப்படுகின்றன. அதிகாலையில் விழித்துக் கொண்ட கன்னிப் பெண்கள் உறங்கிக் கொண்டு இருக்கும் பெண்களை துயில் எழுப்புவதாக அமைந்துள்ளது. பிற்பகுதியில் நீராடுதல் பாடல்கள் காணப்படுகின்றன. இதற்கு திருப்பாவையில் தெய்வம் என்ற அருள் நீரில் முழுகித் தூய்மை பெற வேண்டும் என்ற அரும் பெரும் கருத்து வெளிப்படையாக கூறப்பட்டுள்ளது.

கோயில்களில் மட்டுமல்ல மார்கழி மாதம் விடியற் காலங்களிலும் இல்லங்களில் சைவர்களால் திருவெம்பாவையும், வைணவர்களால் திருப்பாவையும் ஓதப்படுகின்றன. இத்தோடு மாணிக்கவாசகர் அருளிய திருபள்ளியெழுச்சியையும்,

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய திருப்பள்ளியெழுச்சியையும் கோயில்களில் இறைவனை பள்ளி எழுந்தருளச் செய்வதாக பாவனை செய்து பாடப்பட்டு வருகின்றன. இத்தகைய தெய்வீக சூழலை உருவாக்கும் நிகழ்வுகள் இந்த மார்கழி மாதத்திலேயே நிகழ்வதைக் காணமுடிகிறது. இதைவிட வேறு சிறப்பேது? இதனாலேயே மார்கழி மாதம் சிறப்படைகின்றது.

அதேபோல திருவெம்பாவை நிகழ்வும் சிறப்புடையதாக அமைகின்றது. இந்தியாவில் சிதம்பரத்தில் திருவெம்பாவை நிகழ்வு அதி அற்புதமானது. அதுவும் இறுதிநாள் திருவாதிரை உற்சவம் நள்ளிரவு பன்னிரண்டு மணி முதலே தொடங்கி விசேட அபிடேகம், ஆராதனை, பள்ளியெழுச்சி பாடல் , திருவெம்பாவைப் பாடல் என்பன அதி உன்னதமாக நடைபெறுகின்றது.

ஆனந்தமான காலைக் காட்சிகளையும் இன்பமான தெய்வீக ஒலிகளையும் மார்கழி மாதமும் திருவெம்பாவையும் பிரஸ்தாபிக்கிறது எனலாம்.

ஆண்டாள் பாடிய திருப்பாவையும், மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையும் அனைவரும் அறிவர். மாணிக்கவாசகரால் பாடப்பட்ட திருவெம்பாவைப்பாடல் திருவண்ணாமலையில் பாடப்பட்டது என்று கூறுவோரும் உளர். அதேவேளை இது திருப்பெருந்துறையில் பாடப்பட்டது என்று கூறுவோரும் உண்டு. அதனையும் விடுத்து தில்லையிலேதான் பாடப்பட்டது என்று கூறுவோரும் உண்டு. மாணிக்கவாசகர் தமது வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் தில்லையிலேயே தங்கி இருந்து பல திருவாசகப் பதிகங்களைப் பாடியுள்ளார். எனவே திருவெம்பாவைப் பாடல்களும் "கோயில்" என்ற சிறப்புப் பெற்ற சிதம்பரத்திலேயே பாடப்பட்டதாக பலரும் வாதிட்டுள்ளார்கள்.

இனி திருவெம்பாவைபற்றி சற்று நோக்கினால் அதன் அமைப்பானது முற்பகுதி துயில் எழுப்புவதும் பிற்பகுதி நீராடுவதுமாக அமைந்துள்ளது. முதல் எட்டுப் பாடல்களிலும் ஒவ்வொரு தோழியரும் துயில் எழாத தோழியரை துயில் எழுப்புவதாக அமைந்துள்ளது. ஒன்பதாவது பாட்டில் அவர்கள் இறைவனைப் பிராத்தித்து நல்ல கணவர் கிடைக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்வதாக உள்ளது.

பத்தாவது பாட்டிலே குளத்திலே நீராடச் செல்வதும், இவ்வாறு கூறிச் சென்றவர் இறுதியாக இருபதாம் பாட்டிலே இறைவனின் ஐந்தொழில் தன்மை கூறப்பட்டு, இது போற்றிப் பாடலாக இடம் பெற்றுள்ளது. இதில் எட்டுப் போற்றிகள் காணப்படுகின்றன. போற்றி என்று கூறி அருள் புரியுமாறு இறைவனைப் பிராத்திப்பதாக அமைந்துள்ளது.

*ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்*
*சோதியை யாம்பாடக் கேட்டேயும், வாள்– தடங்கண்*
*மாதே! வளருதியோ? வன் செவியோ நின் செவிதான்!*
*மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்*
*வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து*
*போதார் அமளியின் மேல்நின்றும் புரண்டு இங்ஙன்*
*ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!*
*ஈதே எம் தோழி பரிசு! ஏலோர் எம்பாவாய்.*

என்பது திருவெம்பாவையின் முதல் பாடலாகும். இறுதியாக *"போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்......... போற்றியாம் மார்கழி நீர் ஆடு ஏலோர் எம்பாவாய்"* என்று கூறிமுடித்துள்ளார். திருவாதிரை சிறப்பு பற்றி ஓர் பழமொழியுண்டு. "திருவாதிரைக்கு ஒருவாய் களி" என்பது அது. சிவனுக்கு ஜென்ம நட்சத்திரம் திருவாதிரை. அந்நாளில் ஒரு வாய் களி உண்டால் அதன் பலன் அளவிடக்கரியது. இந்நாளில் விரதமிருந்து களி செய்து நடராஜப் பெருமானுக்கு நிவேதனம் செய்து நடராஜரை தரிசித்து பின் அக்களியை உண்டு விரதத்தை முடிப்பர். திருவெம்பாவை திருவாதிரையன்று இறைவனுக்கு களி ஓர் பிரசாதமாக படைப்பது உண்டு. இன்னோர் கதையும் உண்டு. ஒருமுறை திருமால் சிவனது தாண்டவ நடனத்தை கண்டு மகிழ்ந்தார். அதே நினைவில் அவர் தானே மனதில் நினைத்து சிரித்தார். அதனைக் கண்ட ஆதிசேஷன் மகிழ்ச்சியின் காரணம் யாது என்று கேட்டார். சிவனது தாண்டவ நடனத்தை எண்ணிப் பார்த்து மகிழ்ந்தேன் என்றார். ஆதிசேஷனும் தானும் சிவனது நடனத்தை காணவிரும்பினான். இறைவனிடம் சென்று கேட்டார். அதற்கு இறைவன், வியாக்ரபாதரும் விரும்பியுள்ளார். நீவீர் இருவரும் மார்கழி திருவாதிரையன்று தில்லையில் எனது நடனத்தைக் கண்டு மகிழலாம் என்றார். அதன்படி ஆதிசேஷன் தன் உருவத்தில் பாதி பதஞ்சலி முனிவராயும் பாதி பாம்பின் வடிவமாகவும் பூமியில் தவஞ் செய்து கொண்டு பதஞ்சலி வடிவம் தாங்கி வந்து இறைவனது அருளை பெற்று திருநடனத்தை திருவாதிரை நன்னாளில் கண்டு மகிழ்ந்ததாக புராணம் கூறுகிறது.

அத்திரி மகரிசியின் மனைவி அனுசூயாதேவி கற்பின் மேன்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர். இவரது கற்பின் மகிமையை சோதிக்க முப்பெரும் தேவியரும் எண்ணி அதன்படி சிவன், பிரம்மா, விஷ்ணு மூவரையும் அத்திரி முனிவரின் குடிலுக்கு அனுப்பினர். அவர்கள் அங்கு சென்றபோது அனுசூயா அவர்களை உபசரித்து விருந்தளிக்க முற்பட்டார். அதற்கு தவசிகள் குழந்தை இல்லாத வீட்டில் விருந்து உண்ணமாட்டோம் என்று மறுத்தனர். சற்று திகைத்தார் அனுசூயா. பின்னர் தன் கணவரை மனதில் நினைத்து மூவரையும் குழந்தைகளாக மாற்றி அவர்களுக்கு தாயாக அமுதூட்டினார். அப்போது அனுசூயாவின் கற்பின் மேன்மையை அறிந்த முப்பெரும் தேவியரும் தங்கள் கணவரை தங்களிடம் ஒப்படைக்குமாறு வேண்டினர். இதோ உங்கள் நாயகர்களை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். மூவரும் மாறி மாறி எடுத்துக் கொண்டனர். இதனால் தேவியரின் பெருமை குன்றிவிட்டது. அப்போது முப்பெரும் தேவியரும் தங்களது தவறுக்கு கிடைத்த தண்டனை இதுவென எண்ணிக் கலங்கினர். அனுசூயா கணவரின் பாத தீர்த்தத்தை குழந்தைகள் மீது தெளிக்க மூன்று குழந்தைகளும் பழைய உருவம் அடைந்தனர். இந்த மயக்க நிலையில் ஏற்பட்ட தூய்மைக் குறைவு நீங்க தீர்த்தக் குளத்தருகே அக்னி வளர்த்து மூன்று தேவியரும் நெருப்பில் இறங்கி தம்மைப் புனிதப்படுத்திக் கொண்டனர். இது ஓர் திருவாதிரை நாளிலே நிகழ்ந்தது என புராணம் கூறுகின்றது.

அடுத்து மார்கழி மாதத்தில் வரும் ஏகாதசி திதி சுவர்க்க வாயில் ஏகாதசி என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது. மார்கழி மாதத்து அமாவாசையை அடுத்து பதினோராம் நாள் வருவது ஏகாதசி திதியாகும். இந்நாளில் சொர்க்கவாயில் திறந்திருப்பதாக ஓர் நம்பிக்கை உண்டு. வைகுண்டவாசல் திறந்து இருக்கும். இவ்வாறு பல ஆன்மீக தெய்வீக தன்மைகளை சிறுவர் முதல் பெரியோர்வரை உணர வைக்கும் இம்மார்கழி மாதமும் சிறப்பிற்குரியது. அதேபோன்று இம்மாதத்தில் பத்து நாட்கள் இடம்பெறும் திருவெம்பாவையும், பத்தாம் நாள் நடைபெறும் திருவாதிரையும் சிறப்புடையதே. நாம் அனைவரும் தெய்வீக சிந்தனையில் ஈடுபட்டு அமைதிக்கும் அன்புக்கும் வழி சமைத்து நாமும் வாழ்ந்து அனைவரையும் வாழவைப்போம்.

## நூலகம்



# இறைவன் தந்த கோயில்



த. மனோகரன்

சமயம் என்பது வாழ வேண்டிய வழியைக் காட்டி நிற்பது. எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழியமைத்து நெறிப்படுத்துவதே சமயம். தோற்றம் தெரியாத தொன்மை மிக்க இந்து சமயம் பரந்த, விரிந்த, நுணுக்கமான முறையிலே ஆணித்தரமாக வாழும் நெறியை வகுத்துக் கொண்டுள்ளது.

உலகில் தோன்றும் சகலதும் இறைவனின் ஆக்கமே என உறுதியான நம்பிக்கையும், அந்தப் பரம் பொருளே உலகை இயக்கும் சக்தியென்ற திடமும் கொண்டது இந்துசமய தத்துவம். பரம் பொருள் ஒன்றே. அதுவே எங்கும், எதிலும் வியாபித்து இயங்குகின்றது. அந்த மாபெரும் சக்திக்கு இணையில்லை என்பதும் கொள்கையாகும்.

ஆதிமுதல் தொடர்ந்து வரும் இத்தத்துவக் கொள்கைகளை ஞானிகளும், முனிவர்களும், துறவிகளும், சித்தர்களும் இது போன்ற தத்துவ உண்மைகளைத் தெரிந்துணர்ந்த பெரியோர்களும் காலங்காலமாகப் போதனை செய்து வருகின்றார்கள். வாழ நல்ல வழிகாட்டி வருகிறார்கள்.

இயற்கையைத் தெய்வமாகப் போற்றும் மரபு இந்துக்களுக்குரிய சிறப்பு. அதனால் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களையும் இறையுருவிலே காண்கின்றான் இந்து. ஒரு மனிதன் இப்பூமியிலே பிறப்பதும் இயற்கை. அவன் இறப்பதும் இயற்கை. அழிவற்ற ஆன்மாவை உருக்கொடுத்து இப் பூமியிலே இயங்க விடுவது இயற்கை. அதாவது, ஒரு உயிருக்கு உடம்பென்னும் உருவத்தை வழங்குவது இயற்கை. பல்வேறு உயிரினங்களாகப் பல்வேறு உருவங்களில் இந்தப் பூமியிலே பிறந்து நடமாடித் திரிந்து, வாழ்வதற்காக அமைந்த உடலானது பஞ்சபூதங்களாலானது என்பது மறுதலிக்க முடியாதது.

உயிர் அதாவது ஆன்மா அழிவற்றது. நித்தியமானது. அது பஞ்சபூதங்களாலான உடல் பெறும்போது பல்வேறு வகைப்பட்ட பெயர்களைப் பெறுகின்றது. இனக் குறியீடுகளைப் பெறுகின்றது.

இதை மணிவாசகப் பெருமான் தனது திருவாசகத்திலே *புல்லாகிப் பூடாகி புழுவாய் மரமாகிப் பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய், மனிதராய்,பேயாய்க் கணங்களாய் வல்லசுரராய் முனிவராய் தேவராய் செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன்* என்று தெளிவாகக் கூறுகின்றார். அதாவது ஒரு உயிரானது மேற்கூறப்பட்ட உலகிலுள்ள எல்லாப் பிறப்புக்களையும் எடுக்கும் தன்மை கொண்டது என்பது தெளிவுறுத்தப்படுகின்றது.

மறுபிறப்பு என்பது உண்டு. அந்த மறுபிறப்பில் மிருகமாயிருந்தவன் மனிதனாய்ப் பிறக்கலாம். மனிதனாய் இருப்பவன் மிருகமாகப் பிறக்கலாம். உடல் நிரந்தரமல்ல. உயிர் நிரந்தரமானது. அழியாதது. வினைப் பயன்களுக்கேற்ப அதாவது உடம்பைப் பெற்றபின் இப்புவியிலே வாழ்ந்த முறைக்கேற்ப மறுபிறவி வரும் என்பது நமது நம்பிக்கை.

அரிது, அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது என்றார் ஔவைப்பாட்டியார். அதாவது பிறப்புக்களிலெல்லாம் உயர்ந்த பிறப்பு மனிதப் பிறப்பு என்றார். அந்த உயர்ந்த மனிதப்பிறப்பு அதாவது மனித உருதாங்கிய பிறப்பும் ஏனைய உயிரினங்களைப் போன்றே பஞ்ச பூதங்களாலானதுதான். உயர்ந்தது என்று போற்றப்பட்ட மனிதனும் சிறப்பின் பின் தான் தாங்கியிருந்த உடலை பஞ்சபூதங்களுடன் கலந்து விட்டு ஆன்மாவைத் தனியே கொண்டு செல்கின்றான். அந்த ஆன்மாவுடன் வருவதே இப்பூமியிலே வாழ்ந்த காலத்தில் செய்த நல்வினை, தீவினை என்பவைகளாகும்.

நல்வினை செய்தால் நற்பேறு அடைவது போன்றே தீவினை செய்தால் தீயபேறு பெறுவர் என்பது அறநெறி காட்டும் உண்மை. மனித குலம் உயர்ந்தது. மற்றைய உயிரினங்களைவிடவும் மேலானது. அவ்வாறான உயர்ந்த பிறப்பைக் கொடுத்த இறைவன் பகுத்து அறிந்து வாழ மனிதனுக்குப் புத்தியை மேலதிகமாகக் கொடுத்துள்ளார்.

ஓரறிவு, ஈரறிவு, ஐந்தறிவு என்று தாவரங்கள் முதல் மனிதப் பிறவி தவிர்ந்த ஏனைய சகல உயிரினங்களுக்கும் அறிவைக் கொடுத்த இறைவன் மனிதனுக்கு மட்டும் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவும் அறிவையும் அருளியுள்ளார்.

புவியிலே உருவாகும் தாவரங்கள் முதலான சகல உயிரினங்களும் உண்கின்றன, உறங்குகின்றன. சந்ததியை உருவாக்குகின்றன. முடிவில் அழிகின்றன. மனிதகுலமும் அவ்வாறேயானாலும் பகுத்தறிவால் இவற்றையும் விட மேம்பட்ட பல செயல்களை ஆற்றும் ஆற்றல் பெற்றுள்ளது.

அவற்றிலே முதலிடம் பெறுவது இறைநம்பிக்கை. தன்னை விட ஒரு சக்தியுண்டு. அச்சக்தியே உலக இயக்கத்திற்குக் காரணமாயுள்ளது. அந்தப் பெரும் சக்தி மீது நம்பிக்கை கொண்டு நல்வழியில் இப் புவியில் வாழவேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் அதன் பயன் மறுபிறவியில் கிட்டும் என்ற ஆழ்ந்த சிந்தனையை, உண்மையைப் பகுத்தறியும் சக்தி மனிதனுக்கு வழங்குகின்றது. அடுத்த பிறவிக்கு தயார் செய்து கொள்ளும் பக்குவத்தை வழங்குகின்றது.

இதுவே மனிதப் பிறவியின் சிறப்பு. ஏனைய உயிரினங்களுக்குக் கிட்டாத இறையருள். இதைப் புரிந்து கொண்டால் மனித வாழ்வை மாண்புறச் செய்து கொள்ளும் பக்குவம் கிட்டும். ஆனால் உலகிலே மனிதகுலம் பகுத்தறிவைப் பயன்படுத்தாது தறிகெட்டு, நெறிபிறழ்ந்து அவதிப்படுகின்றது. அன்பும், பண்பும், அருளும் நிறைந்த வாழ்வு வாழவேண்டிய மனிதர்கள் பகையும், பொறாமையும் , வஞ்சகமும் நிறைந்த மனதினராய் வாழ்வதால் உலகிலே அவலங்களும், அவதிகளும் தலைவிரித்தாடுகின்றன. உலகின் நிம்மதி, அமைதி அழிக்கப் படுகின்றது.

இதற்கு மருந்துண்டா என்று ஏங்க வேண்டியதில்லை. அதற்கான மாமருந்து நமது சமயத்திலே கூறப்பட்டுள்ளது. அந்த

மருந்துதான் அன்பு. அதனால்தான் அன்பேசிவம் என்று கூறுகின்றோம்.

எங்கும் நிறைந்து, எதையும் ஆற்றும் வல்லமை கொண்ட, சகலவற்றையும் அறியும் தன்மை கொண்ட இறைவனை நாம் சிவன் என்று திருநாமமிட்டுப் போற்றி வணங்குகின்றோம். உலகைப் படைத்து, காத்து, அழித்து, அருளி, மறைக்கும் ஐந்தொழில்களையும் ஆற்றும் எம்பெருமானை அன்புருவாகக் காண்பது, தொழுவது நமது மரபு.

அன்பு மயமான, அருள் மயமான சிவனை முழுமுதற் கடவுளாக, சகல சக்திகளுக்கும் அதிபதியாக, ஆதியும் அந்தமும் அற்றவனாகக் காணும் பேற்றை இந்து சமயநெறி காட்டி நிற்கின்றது.

அதனால்தான் இந்துக்களாகிய நாம் செந்தமிழில் இறைவனைப் போற்றிப் பாசுரங்கள் பாடித் தொழுத பின் அப்பெருந்தகையிடம் தினமும் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம். பிரார்த்தனை செய்கின்றோம். நாம் எம்பெருமானிடம் கேட்கும் வரம் என்ன? சிந்திப்போம். நமது பிரார்த்தனையின் தாற்பரியத்தையிட்டுப் பெருமைப்படுவோம்.

இன்பத் தமிழால் இறைவன் புகழ்பாடித் துதித்த பின் அந்தப் பரம் பொருளிடம் எதைக் கேட்கிறோம் நாம்? தென்னாடுடைய சிவனே போற்றி என்று எம்பிரானைப் போற்றுகின்றோம். அவன் அருட் கருணைக்காக அவன் திருவடியைத் தொழுது சரணடைகிறோம். அடுத்து என்ன கேட்கிறோம் எம்பிரானிடம்? எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி என்கின்றோம். இன, மத, மொழி, நிற, நாடு என்று சகல வேற்றுமைகளையும் கடந்து உலகிலுள்ள சகலருக்கும் இறைவா எம்பிரானே உன் திருவருள் கிட்ட வேண்டும் என்று வேண்டுதல் செய்கின்றோம்.

அடுத்து என்ன கேட்கின்றோம் என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம். இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க என்று வேண்டுதல் செய்கின்றோம். வாழ்த்துகின்றோம். உலகிலுள்ள சகல மனித குலத்தோரும் இன்பமே சூழ நல்வாழ்வு வாழ இறைவா சிவபிரானே அருள் வழங்குவாய் என்று பணிந்து வேண்டுகின்றோம்.

உலகமே ஒரு குடும்பம். மனித குலத்தில் பேதங்களில்லை. யாவரும் ஒரே இறைவனின் படைப்புக்களே. எல்லோரது ஆன்மாவும் ஒன்றே. எல்லோரும் அன்பும், அருளும், பண்பும் நிறைந்தவர்களாக நிம்மதியாக, அமைதியாக நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே ஒரு இந்துவின் நாளாந்தப் பிரார்த்தனையாக அமைகின்றது.

இன்றைய உலகம் நல்வழியில் நிம்மதியும், அமைதியும் காண எல்லோர் உள்ளங்களிலும் இந்துக்களின் பிரார்த்தனையின் பண்பு பரவ வேண்டும். இந்துவின் பிரார்த்தனையின், வேண்டுதலின் அவா என்னவென்று உலகத்தோர் புரிந்து கொண்டு இந்துவின் அன்பு வழியில், அறவழியில், பண்பு வழியில் தாமும் இறைவனை வழிபட வேண்டும். அப்போது உலகத்தோர் மனதில் பக்தியும், பண்பும் மேலோங்கும்.

அவன் உன்னவன், அவன் அந்நியன் என்ற சிந்தனையையும், மனித குலத்தில் நிலவும் சகல ஏற்றத் தாழ்வுகளையும் புறந்தள்ளி உயர்ந்த நோக்கத்தில் சிந்தனையை நெறிப்படுத்தும் ஆற்றல் கொண்டது இந்துவின் பிரார்த்தனை.

இறைவனின் ஆக்கமான உயிரினங்களை இறைவன் உறையும் ஆலயமாகக் காண்பவன் இந்து. அந்த ஆலயத்திலேயுள்ள கருவறையாக ஒவ்வொரு உடலிலுமுள்ள இதயத்தைக் கொள்கின்றோம். காயமே கோயிலாக என்ற கூற்று உடலைக் கோயிலாகக் கொள்ளும் தத்துவக் கருத்தாகும்.

மனிதனால் கட்டப்பட்ட ஆலயத்தைச் சுத்தமாக, புனிதமாக வைத்துக் கொள்வதற்கு எவ்வளவு முனைப்புகள் மேற் கொள்கின்றோம்? புனிதம் கெட்டு விடக்கூடாது என்பதற்காக எவ்வளவு பாடுபடுகின்றோம்? புனிதத்தைக் கெடுக்கும் ஏதாவது நடந்து விட்டால் எத்தனை பிராயச்சித்தங்கள் மேற் கொள்ளப்படுகின்றன? இவ்வாறு மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தின் புனிதத்தைப் பேண எடுக்கும் முயற்சியில் எதையாவது இறைவனால் ஆக்கப்பட்ட உயிரைத் தாங்கி நிற்கும் உடம்பாகிய கோயிலைப் புனிதமாகப் பேண மேற்கொள்கின்றோமா என்பதை சிந்திப்பது அவசியமாகின்றது.

உடம்பாகிய ஆலயத்தை சுத்தமாக, புனிதமாகக் கருதிப் பேண வேண்டியதுடன் அதனுள்ளே உறையும் ஆன்மாவாகிய இறைவனை பேண வேண்டியதும் கடமையாகும்.

ஆலயமாகிய உடலிலே இறைவன் உறையும் கருவறையாக விளங்குவது அதனுள்ளேயுள்ள இதயம். இதயம் புனிதமாகப் பேணப்பட வேண்டியது. அசுத்தங்களை அப்புறப்படுத்தி சுத்தமாகப் பேணப்பட வேண்டியது இதயம். இறைவன் ஒவ்வொருவருக்கும் சொந்தமாக தான் உறையும் ஆலயமொன்றை வழங்கியுள்ளார். அதுதான் நமக்கு இறைவனால் வழங்கப்பட்டுள்ள உடம்பு. இதை நாம் நித்தியம் நினைவிலே இருத்திக் கொள்ள வேண்டும்.

இறைவன் தந்த ஆலயத்தை நல்ல முறையில் பேணுவதே வாழ்க்கை. தான் தந்த ஆலயத்தை சிறப்பாகப் பேணி வாழ்ந்து நற்பேறு பெற வழிதந்த இறைவன் ஈற்றிலே அப்பணியின் அதாவது வாழ்வின் தரத்தைக் கணித்து, கதி தந்து கருணை செய்கின்றார்.

இதயத்திலே அதாவது உள்ளத்திலே கெட்ட சிந்தனைகள் இடம் பெறாது காப்பது மனிதன் மாண்புடன் வாழ வேண்டிய வழியாகும். தீயன உள்ளத்தில் புகாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும். செய்யத்தகாத செயல்களைச் செய்யத் தூண்டும் சிந்தனைகளை மனதிலே புக இடமளிக்காதவனே மனிதன் ஆகின்றான். பகுத்தறியும் பண்பைப் பேணும் ஆற்றல் பெற்றவனாகின்றான்.

மனிதன் பண்பட்ட நெறியில் வாழத் தன்னைத்தான் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே சமய வாழ்வு. சமயம் காட்டும் நெறி. நல்ல பண்புகளைக் கொண்டவனாக, உலகத்தோர் போற்றும் நல்லியல்புகள் கொண்டவனாக வாழ்வதே சமயவாழ்வு வாழும் வழி.


இயற்கையால் அதாவது நித்தியமாகவுள்ள பஞ்ச பூதங்களால் தற்காலிகமாக எம் பெருமானாகிய இறைவனால் உருவாக்கப்பட்ட உடம்பைப் பேணி அதனுள்ளே கருவறையாக விளங்கும் இதயத்தைப் புனிதமாகப் பேணுவது மனித வாழ்வின் சிறப்பாகும். நல்ல சிந்தனைகள் மனதிலே உதிக்கும் வழியிலே நல்ல நோக்கங்களை மட்டுமே மனதிலே இருத்திக் கொள்ள வேண்டும். நோக்கமும், சிந்தனையும் அதன் வழிவரும் செயற்பாடுகளும் எவரொருவருக்குத் துன்பம் செய்யாது இன்பம் தருவதாக அமைந்துவிட்டால் அது வாழ்வின் சாதனையாக அமைகின்றது. வேதனை உருவாக்கும் நோக்கங்களும், சிந்தனைகளும், செயற்பாடுகளும் நிம்மதியான, அமைதியான ஆன்மீக வாழ்வின் எதிரிகளாக அமைந்து விடுகின்றன.

எனவே, வாழ்வை சிறப்புற, நேரிய வழியில் செலுத்தி பெருமை பெற நல்ல சிந்தனைகள் மனதிலே ஊற்றெடுக்கக்கூடியதான நோக்கில் சிந்தித்து செயற்படுவோம். இதுவே வாழ வேண்டிய வழி. துன்பம் தொலைந்து இன்பம் நிறைய இந்து சமய தத்துவம் காட்டும் நல்வழி. மனிதனாக வாழ உறுதி கொண்டு செயற்பட்டு வாழ்வில் உயர்ச்சி காண உழைப்பதே சமய வாழ்வாகும்.



# அருட்பிழம்பாக நின்ற அண்ணாமலையான்

அருணாசலம் பூங்கோதை (B. A Dip. in. Edu.)
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.



*"அவனின் முடியை எட்டிலர் எவரும்*
*அவனின் அடியை தொட்டிலர் எவரும்*
*அவனின் அகலம் அறிந்திலர் எவரும்*
*அவனின் நீளம் தெரிந்திலர் எவரும்"*

" ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதி" – இத்தகைய சிறப்புக்கள் பல பெற்றவன் பரம்பொருளாம் சிவன். சிவனை முழுமுதற் கடவுளாக கொண்டு வழிபடப்படும் நெறி சைவநெறியாகும். இந்நெறியினை மேற்கொள்வோர் சைவர் எனப்படுவர். சிவனை சைவர்கள் பல வழிகளில் வழிபடுகின்றனர். பண்டிகையாகவும், விரதமாகவும் வழிபடும் சிறப்பு பெற்றது திருக்கார்த்திகை திருநாளாகும். இதனை கார்த்திகை விளக்கீடு என்றும் சிறப்பித்துக் கூறலாம். கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்திற்குரியது இத்தினமாகும். ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரம் வந்தபோதும் கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரம் சிறப்புடையதாகும். பரம் பொருளாம் சிவன் சாதாரண மக்களால் மட்டுமன்றி பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களாலும் அறிய முடியாத உன்னதமான ஓர் சக்தி. அச்சக்தி எல்லையில்லாத, ஒப்பீடு இல்லாத மேலான சக்தி. ஆணவச் செருக்குடன் நோக்கின் அறிய முடியாத ஒன்று. ஆனால் அறிவுடன் நோக்கின் அறிய வேண்டிய ஒன்று என்பதை உணரவைப்பதற்காக பிரம்மா, விஷ்ணு முன்னால் விண்ணும், மண்ணும் அளக்குமாறு அனற்பிழம்பாக தோன்றிய நாளே கார்த்திகைத் தீப நாளாகும்.

கார்த்திகைத் தீப திருநாளுக்கு புராணக் கதை ஒன்று உள்ளது. கந்தபுராணம் பின்வருமாறு கூறுகின்றது. ஒரு தடவை பிரம்மாவும், விஷ்ணுவும் நித்திரையில் ஆழ்ந்திருந்த போது உலகம் அழிந்து நீரில் மூழ்கியது. இது "பிரளயகாலம்" எனப்படும். இந்நேரம் முனிவர்களும், ரிஷிகளும் சத்தியலோகத்திற்கு சென்று பாதுகாப்பாக இருந்தனர். பூலோகமும், பாதாளலோகமும் நீர் நிறைந்து காணப்பட்டது. ஆனால் பூலோகத்தில் காமாட்சி தவம் செய்த காஞ்சிபுரம், சீர்காழி என்னும் சில தலங்கள் மட்டுமே நீரில் மிதந்தன. இதனால் சீர்காழிக்கு தோணிபுரம் என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று. நித்திரை நீங்கிய நாராயணமூர்த்தி பூமியை எங்கு தேடியும் கிடைக்காமல் இறுதியில் அது பாதாளத்தில் இருப்பதை உணர்ந்து வெள்ளைப் பன்றி உருவம் எடுத்து, பாதாளம் சென்று கொம்பினால் இழுத்து வந்து முன்போல் நிறுத்திவிட்டு, "நானே பூமியை காப்பாற்றி முன்போல் நிறுத்தினேன்" என்னும் அகந்தையில் மீண்டும் யோகதுயில் கொண்டார்.

இதேபோன்று நித்திரை நீங்கிய பிரம்மாவும் படைத்தல் தொழிலை தொடங்கிய போது, அனைத்தும் பழைய நிலைக்கு வந்து உலகம் இயங்கத் தொடங்கியது. பிரம்மா தன் சக்தியினால் பல உன்னத படைப்புக்களை சிருஷ்டித்தார். பின்னர் "நான் நித்திரை செய்யும்போது உலகம் ஒடுங்கும், மீண்டும் நான் நித்திரை விழிக்கும் போது உலகம் இயங்க ஆரம்பிக்கும் எனவே நானே பெரியவன்" என்னும் செருக்குடன் உலகை உற்று நோக்கும் போது, நாராயணமூர்த்தியாகிய திருமால் சிறிய ஆலிலையில் சிறுகுழந்தையாக துளசி மாலை அணிந்தவராக சிவனை நினைத்து யோக நித்திரை செய்தவராக நீரில் மிதந்து வந்தார். உலகை காப்பவன் நானே என்ற அகம்பாவத்துடன் நித்திரையில் ஆழ்ந்திருப்பதை கண்ட பிரம்மா அவருடைய மார்பில் அடித்து யாரடா துயில் கொள்பவன்? எனக் கேட்டார். இதனைக் கேட்ட நாராயணன் ஏளன புன்னகையுடன்" என்னையா தெரியவில்லை. நானே உன் தந்தையும், தாயும் என் உந்திக்கமலத்தில் இருந்தே நீ தோன்றினாய். நானே உன் கடவுள், நானே உன் குரு". அவ்வாறு இருக்கும்போது என்னையா யார் என்று கேட்கிறாய் மூடனே என்றார். இதனைக் கேட்ட பிரம்மா இவ்வுலகத்தினதும், உயிர்களினதும் தோற்றத்துக்கும் ஒழுக்கத்துக்கும் காரணமாக இருந்து படைத்தல் தொழிலை செய்யும் பிரம்மனாகிய எனக்கு தாய், தந்தை, குரு நீயா? உன்னை விட நானே பெரியவன். சதாகாலமும் துயில் கொள்ளும் நீ உலகை படைக்கும் ஆற்றல் கொண்டு என்னுடன் சமமாக முடியுமா? என கேட்டவுடன் கோபத்துடன் நீர் படைத்த உலகத்தினை நானே காக்கின்றேன். பிரளய காலத்தில் நீரில் மூழ்கிய பூலோகத்தை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வந்தேன். அப்படி இருக்கும்போது நீர் மட்டும் எவ்வாறு பெரியவனாக இருக்க முடியும் என தொடங்கிய சொற்போர் பல ஆண்டுகளாக ஆயுத போராக தொடர்ந்தது. இப்போரின்போது ஆயுதங்கள் தாக்கிய கொடிய வெப்பத்தினால் பல மக்கள் மாண்டனர், பலர் துன்புற்றனர். மானிடர் மேல் கருணை கொண்ட பரம்பொருள் இவர்கள் இருவருக்கும் முன்னால் பெரும் சோதிப் பிழம்பாகத் தோன்றினார். இச் சோதியின் அடியையும், முடியையும் எவர் முதலில் காண்கின்றார்களோ அவர்களே பெரியவர் என ஓர் அசரீரி கேட்டது. பிரம்மா அன்னப்பட்சி வடிவில் மேல் நோக்கி பறந்து முடியைக்காண விரைந்தார். விஷ்ணு பன்றி உருவில் நிலத்தை தோண்டி அடியைக் காணச் சென்றார். பல ஆண்டுகளாக தேடியும் அவர்களால் அடியையோ, முடியையோ காணமுடியாததால் தம்மைவிட பெரிய சக்தி ஒன்று உண்டு என்பதை உணர்ந்தனர். அவ்வேளை சோதிப்பிளம்பினுள் சிவன் தோன்றி அவர்களுக்கு அருள்புரிய இருவரும் சிவநாமம் கூறி வழிபட்டனர். அவர்கள் இருவரினதும் வேண்டுதலுக்கிணங்க தன்னை சுருக்கி சிறுகுன்றாக காட்சி கொடுத்தார். அம்மலையே இன்று

திருவண்ணாமலை என்னும் சிவத்தலத்துக்கு அருகில் உள்ளது. இதனை அண்ணாமலை, அருணாசலம், சோணசைலம் என்னும் சிறப்புப் பெயர்களாலும் அழைப்பர்.

இவ்வாறு கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்தில் சோதி வடிவம் பெற்ற சிவன் தன்னை குறுக்கி சிவலிங்கமாக பிரம்மா, விஷ்ணுவிற்கு காட்சி கொடுத்த தினம் மாசிமாத அபரபக்க சதுர்த்தசி திதி கூடிய அர்த்தராத்திரி எனப்படும் லிங்கோற்பவ காலமாகும். இத்தினமே சிவராத்திரியாகும். இந்நிகழ்ச்சி நடைபெற்றது கிருதயுகத்திலாகும். கிருதயுகத்தில் அக்கினி மலையாகவும், நிரேதாயுகத்தில் இரத்தின மலையாகவும், துவாபரயுகத்தில் தாமிர (வெள்ளி) மலையாகவும், கலியுகமாகிய நாங்கள் வாழும் யுகத்தில் கல்மலையாகவும் எம்பிரான் காட்சி கொடுக்கின்றார். நெருப்பு மலையாக பிரம்மா, விஷ்ணுவுக்கு காட்சி கொடுத்ததால் அருணாசலம் என சிறப்பிக்கப்படுகின்றது. அருணா– என்றால் நெருப்பு, அசலம்– என்றால் மலை. எனவே, அருணாசலம் என்றால் நெருப்புமலை என்று பொருள்படும். இத்தினத்திலேயே உமைக்கு சோதி ரூபமாக காட்சி கொடுத்து தம் இடபாகத்தையும் அளித்தமையினால் இம்மலை ஆண், பெண் சமம் என்பதனையும் எடுத்துக் கூறுகின்றது. திருவண்ணாமலையின் உயரம் 2666 அடி நீளம் 13 கி.மீற்றரையும் கொண்டது. ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் இதனை பக்தர்கள் சிறப்பாக வலம் வருவார்கள். இதனை "கிரிவலம்" என்பர். கிரிவலம் வந்து அண்ணாமலையானின் அருளைப் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் வாழ்வோர் முன்னைய காலங்களில் மட்டுமன்றி, இன்று நம்முடன் வாழ்ந்து வருகின்றனர்.

கிரிவலத்தின் பலன்கள் பற்றி அருணாசல புராணம் பின்வருமாறு கூறுகின்றது.

| | |
|---|---|
| ஞாயிற்றுகிழமை | சிவபதம் கிடைக்கும். |
| திங்கள் | உலகை ஆளக் கூடிய வல்லமைக் கிடைக்கும். |
| செவ்வாய் | வறுமை, ஏழ்மை, தொல்லை நீங்கும். |
| புதன் | கலையில் தேர்ச்சி கிடைக்கும். |
| வியாழன் | ஞானிகளுக்கு ஒப்பான நிலை கிட்டும். |
| வெள்ளி | விஷ்ணு பதம் அடைவர். |
| சனி | நவக்கிரகங்களை சுற்றிய பலன் கிடைக்கும். |

முத்தி தரும் பதிகளான திருவாரூரில் பிறக்க முத்தி, காசியில் இறக்க முத்தி, சிதம்பரத்தை தரிசிக்க முத்தி, காஞ்சியில் வாழ்ந்தால் முத்தி. ஆனால் திருவண்ணாமலையினை நினைத்தாலே முத்தி. எனவே அண்ணாமலையானை மன ஒருமைப்பாட்டுடன் கார்த்திகைத் தீப திருநாளில் நினைத்து நாமும் அண்ணாமலையானின் அருளைப் பெறுவோமாக.

## மாமன்றத்தின் அனுதாபம்

தீவிர இறைபக்தரும், சமய ஆர்வலருமான எஸ். ஈஸ்வரதாசன் அவர்களின் மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

இவர் மத்திய வங்கியின் பிரதி ஆளுனராகவும், பின்னர் பெரும் தனியார் கம்பெனிகள் குழுமத்தின் இயக்குநராகவும் உயர் பதவிகளை வகித்துள்ளதன் ஊடாக தமிழ் மக்களுக்கு சிறந்த சேவையாற்றியவர். பின்னாளில் எளிமையான வாழ்க்கையில் இறைபக்தராக, சிவயோக சுவாமிகளின் போதனையின் வழியில் சமயத் துறையில் ஆற்றிவந்த இவரது சேவைகள் பெரிதும் போற்றத்தக்கன.

மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனமான சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியத்தின் தலைவராகவிருந்து நீண்டகாலம் அரும்பெரும் சேவையாற்றிய எஸ். ஈஸ்வரதாசன், அந்த நிறுவனத்தின் பிரதிநிதியாக மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினராகவிருந்து மாமன்ற வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வந்தவர். ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத்தின் ஆயுட்கால உறுப்பினராகவுமிருந்து இவர் செய்த சமயப் பணியும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

இவர் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகக் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கட்டிட நிதியுதவிக்காக தனது புதல்வியின் நாட்டிய நிகழ்வொன்றை ஏற்பாடுசெய்து, கட்டிட நிதி சேகரிப்புக்கு பெரிதும் உதவிய பெருமகன். கட்டிட நிதியுதவிக்காக முதலாவதாக நடந்த நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது பிரிவால் துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு மாமன்றத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**முயற்சிக்கு ஏற்ப மனிதன் தன்னைப் புதிய பாங்குடையவனாய் அமைத்துக்கொள்ளுகிறான். விரும்பினால் விலங்கின் நிலையிலேயே அவன் இருந்து விடலாம். மகனாக வடிவெடுத்துள்ள அவன் மகனுக்குரிய தன்மைகளைப் பெறக்கூடும். மானுட வடிவத்திலுள்ள தேவனாகவும் தன்னை அவன் செய்துகொள்ள முடியும். அவன் வாழ்ந்து வருகின்ற வாழ்வுக்கு ஏற்ப அவனுடைய இயல்பு மாறுகிறது. ஒரு மனிதன் எத்தகைய வாழ்க்கையை நடத்துகிறான் என்பது மிக முக்கியமானது. அவன் அடையும் மேன்மைக்கும் கீழ்மைக்கும் வாழ்க்கை முறையே முதல் காரணம் ஆகிறது. வாழ்க்கையைச் செப்பனிடக் கற்றுக்கொள்வது மிக முக்கியமானது.**

(சுவாமி சித்பவானந்தர்.))




**இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. சிறுவர் சிந்தனைக் கதைகள் சிலவற்றை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதைகளைப் படித்துக் காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்.**

# அனைவரிலும் உயர்ந்தவன் யார்

அரசன் ஒருவனுக்கு நான்கு ஆண் பிள்ளைகள். அரசன் ஒரு நாள் அவர்களைக் கூப்பிட்டு, ''உங்களில் யார் எல்லோரையும் விடப் பெரிய தர்மாத்மாவைத் தேடிக் கொண்டு வருகிறீர்களோ, அவன்தான் அரசுரிமையைப் பெறுவான்'' என்று சொன்னார். நால்வரும் குதிரை மேல் சவாரி செய்து கொண்டு வெவ்வேறு பக்கம் சென்றுவிட்டார்கள்.

ஒரு நாள் பெரிய மகன் திரும்பி வந்தான். அவன் தந்தையின் முன்னே ஒரு பெரிய வணிகனை நிறுத்திவிட்டுச் சொன்னான், 'அப்பா! இந்தச் செட்டியார் எப்பொழுதும் ஆயிரக் கணக்கான ரூபாய் தானம் செய்கிறார். இவர் பல கோவில்களைக் கட்டியிருக்கிறார். குளங்கள் வெட்டி இருக்கிறார். பல இடங்களிலும் இவர் பெயரால் தண்ணீர்ப் பந்தல்கள் நடைபெறுகின்றன. திருத்தலங்கள் பலவற்றிலும் அன்னதானம் செய்து வருகிறார். இவர் தினந்தோறும் கதை புராணங்கள் கேட்கிறார். சாதுக்களுக்கும், அந்தணர்களுக்கும் உணவளிக்கிறார். கோமாதாவைப் பூஜிக்கின்றார். இவரைவிடப் பெரிய தர்மாத்மா உலகில் வேறு யாருமில்லை'

ராஜா சொன்னார், 'இவர் நிச்சயமாக தர்மாத்மாதான்.' செட்டியாருக்கு உரிய மரியாதை செய்யப்பட்டது. அவர் சென்றுவிட்டார்.

இரண்டாவது மகன் ஒரு மெலிந்த அந்தணரை அழைத்து வந்தான். அவன் சொன்னான், 'இந்த அந்தணர் இறைவனது புண்ணிய ஸ்தலங்கள் பலவற்றுக்கு கால்நடையாகவே யாத்திரை செய்து வருகிறார். அவர் சகல விரதங்களும் அனுஷ்டிக்கிறார். பொய் பேசுவது கிடையாது. இவர் கோபம் கொண்டு இருந்ததை யாரும் ஒரு பொழுதும் பார்த்ததேயில்லை. நியமப்படி மந்திரங்களையும், ஜெபங்களையும் முடித்த பிறகே நீர் அருந்துகிறார். மூன்று முறை ஸ்நானம் செய்து சத்தியாவந்தனம் செய்கின்றார். இப்போது உலகில் இவரே பெரிய தர்மாத்மா. உங்கள் கருத்து என்னப்பா?'

ராஜா அந்தணருக்கு வணக்கம் செலுத்தினார். அவருக்கு மிகுந்த தட்சணைகள் கொடுத்து, 'அவர் நல்ல தர்மாத்மாதான்' என்றார். மூன்றாவது மகன் திரும்பி வந்தான். அவனுடன் ஒரு சாது வந்தார். சாது வந்தவுடனேயே ஆசனத்தில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டார். அவருக்கு மிகப் பெரிய ஜடாமுடி இருந்தது. உடம்பில் வெறும் எலும்புகள் மட்டுமே தென்பட்டன. 'அப்பா! நான் மிகவும் கேட்டுக் கொண்டதனால் வந்திருக்கிறார். மிகப் பெரிய தபஸ்வி. ஏழு நாட்களில் ஒரு முறை மட்டும் பால் குடிக்கிறார். வெய்யில் காலத்தில் பஞ்சாக்னியில் காய்கிறார். குளிர்காலத்தில் நீரில் நிற்கிறார். எப்பொழுதும் கடவுளைத் தியானம் செய்து கொண்டே இருக்கிறார். இவரைப் போன்ற ஒரு தர்மாத்மாவை நினைத்துப் பார்க்கவும் முடியாது. என்ன! நான் சொல்வது சரிதானே?' என்றான் மகன்.

ராஜா மஹாத்மாவை வணங்கினார். மஹாத்மா ஆசீர்வாதம் செய்துவிட்டு எதுவுமே சொல்லாமல் சென்றுவிட்டார். 'கட்டாயம் இவர் பெரிய தர்மாத்மாதான்' என்றார் அரசன்.

கடைசியாக நான்காவது மகன் வந்தான். அவனுடன் அழுக்கு உடை அணிந்த ஒரு கிராமத்து குடியானவனும் வந்தான். அந்தக் குடியானவன் தூரத்திலிருந்து கை குவித்து வணங்கிப் பணிவுடன் ராஜாவின் பக்கவாட்டில் வந்து நின்றான். மூத்தவர் மூவரும் தங்கள் இளைய சகோதரனின் முட்டாள் தனத்தைப் பார்த்துச் சிரித்தனர். அப்பொழுது சிறியவன் சொன்னான், 'ஒரு நாயின் உடம்பில் காயம்பட்டுவிட்டது. யாருடைய நாயென்று தெரியவில்லை. இவன் பார்த்தான். உடனே காயத்தைக் கழுவ ஆரம்பித்தான். நான் இவனை அழைத்து வந்திருக்கிறேன். இவன் தர்மாத்மாவா, இல்லையா என்று தெரியவில்லை. நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள்'.

"நீ என்ன தர்மம் செய்கின்றாய்?'' என்று அந்தக் குடியானவனிடம் கேட்டார் ராஜா. பயந்து கொண்டே அவன் சொன்னான், ''நான் படிக்காதவன். தர்மத்தைப் பற்றி எனக்கு என்ன தெரியும்?, யாராவது நோய்வாய்ப்பட்டால் முடிந்தவரை பணிவிடை செய்கிறேன். யாராவது யாசித்தால் கைப்பிடியளவு அன்னம் கொடுக்கிறேன்'.

இவன் எல்லோரைக் காட்டிலும் பெரிய தர்மாத்மா என்று அரசன் அறிவித்தார். அரசனின் எல்லாப் பிள்ளைகளும் இங்குமங்கும் பார்த்த பொழுது அரசன் சொன்னார். 'தானம் அளித்தல் புண்ணியம்; தேவர்களுக்கும், பசுவுக்கும் பூஜை செய்தல் தர்மம்; பொய் பேசாதிருத்தல், கோபம் கொள்ளாதிருத்தல், தீர்த்தயாத்திரை செல்லுதல், சந்தியாவந்தனம் செய்தல், பூஜை செய்தலும் தர்மம்தான். தவம் செய்வதும் தர்மம்தான். ஆனால் எந்தவித எதிர்பார்புமின்றி ஆதரவற்ற உயிரினங்களுக்கு சேவை செய்தல் அனைத்திலும் பெரிய அறம். எந்தவிதச் சுயநலமின்றி பசித்தவனுக்கு உணவளித்தல், நோயுற்றவனுக்குத் தொண்டு செய்தல், துன்பத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்தல் முதலியன எல்லாவற்றையும் விடப் பெரிய தர்மம். யார் மற்ற ஜீவன்களுக்கு நன்மை செய்கிறார்களோ, அவர்களுக்கு நன்மை தானாகவே ஏற்படுகிறது. மூவுலகிற்கும் தலைவனான கடவுள் அவனிடம் மகிழ்ச்சி கொள்கிறார்.

கருத்து: பிறர் நலம் பேணுதல் போல் தர்மம் வேறு இல்லை!

*பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்*
*நன்மை கடலிற் பெரிது* *(திருக்குறள்)*

---

**கடமை பக்தி - இவை இரண்டுமே சமமானவை. கடமை செய்பவன் கடவுளைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. பக்தி செய்பவன் கடவுளைத்தான் பொருளாக எடுத்துக்கொள்ள வேண்டும்.** (ஸ்ரீவேணுகோபாலன்)




**இது மாணவர்களுக்கான பக்கம். இதில் சமய வரலாறு, மற்றும் புராணக் கதைகள் உட்பட மாணவர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்கள் அலங்கரிக்கின்றன. இது போன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.**

# பெரிய புராணக் கதைகள்

# தந்தையைத் தண்டித்த தனயன்

காவிரியால் வளம் பெறுவது சோழநாடு. இந் நாட்டில் மண்ணியாற்றின் தென்கரையில் முருகப் பெருமானால் உருவாக்கப்பட்ட ஊர் சேய்ஞலூர் என்பது.

இது சோழர் தலைநகரங்களில் ஒன்றாகும். இங்குள்ள மக்கள் திருவெண்ணீறு அணிந்த மேனியராய்க் காட்சி தருவர். இவர்களின் உள்ளம் ஒருமைப்பட்ட அன்புடையது. மறைகளை ஓதியுணர்ந்து, ஐம்புலன்களையும் அடக்கி, இவர்கள் நல்வாழ்வு வாழ்கின்றவர்கள். வானத்தில் திங்களும் அதைச் சூழ்ந்து தாரகைகளும் துலங்குதல்போல் இங்குள்ள மடங்களில் ஆசான் கல்வி கற்பிக்க, மாணவர்கள் அவரைச் சூழ்ந்து பயின்று கொண்டிருப்பர். பண்ணின் பயன் நல்லிசை; பாலின் பயன் இன்சுவை; கண்ணின் பயன் மிகுந்த ஒளி; கருத்தின் பயன் ஐந்தெழுத்து; விண்ணின் பயன் நல்மழை; மறையின் பயன் சைவநெறி; இவ்வாறே இவ்வுலகின் பயன் சேய்ஞலூர் என்னும் புகழ் கொண்டது இவ்வூர்.

இங்கு அந்தணர் குலத்தில் எச்சதத்தர் என ஒருவர் இருந்தார். இவரிடம் செல்வம் மிகுந்திருந்தது. இவர் மனைவி பவித்திரை என்பவள் நல்லொழுக்கங்களில் சிறந்தவள். சுற்றம் காத்து இல்லறத்தைத் தூய்மையாக நடத்தி வந்தாள். இவ்வம்மையின் வயிற்றில் சைவம் தழைக்கப் பிறந்தார் விசாரசருமர். இவருக்கு ஐந்தாண்டு நிரம்பியதும் கலைப்பயிற்சி தொடங்கப் பெற்றது. முந்தைப் பிறப்பின் தொடர்பால், அரும்பிலுள்ள மணம் அது விரியும்போது வெளிப்பட்டுப் பரவுவதுபோல் இவரிடம் கலையறிவு மிகுந்து விளங்கியது. குலமறைக்கேற்ப ஏழாம் வயதில் இவருக்கு உபநயனம் நடந்தது. பின்னர் மறையை ஓதுவிக்கின்ற பயிற்சியும் நடைபெற்றது.

விசாரசருமர் எல்லாக் கலைகளிலும் வல்லமை பெற்று விளங்கினார். பழம்பிறப்பின் தொடர்பால் அவருக்குப் பிறைசூடிய பெருமான்மீது பேரன்பு மிகுந்தது. அவரையே எப்போதும் மனதில் எண்ணி, அவரது திருவடி அழகில் திளைத்துக் களித்து நின்றார்.

ஒருநாள் இவர் தெருவீதி வழியாகச் சென்று கொண்டிருக்கும் போது, இவரது பக்கமாகப் பசுக் கூட்டமும் போய்க் கொண்டிருந்தது. அங்கு, கன்று ஈன்ற பசு ஒன்று, தன்னை மேய்க்கின்ற இடையனைக் கொம்பால் முட்ட, அவன் அன்பில்லாத நெஞ்சத்தோடு அப்பசுவைத் தடிகொண்டு தாக்கினான். இதைக் கண்ட விசாரசருமருக்கு மனம் பொறுக்கவில்லை. ஆவின் சிறப்பனைத்தும் அவர் நன்கு அறிந்தவரல்லவா! எனவே ஆயனுக்கு ஆவின் மாண்பை எடுத்துரைத்து, "நீ இனி பசுக்களை மேய்க்க வேண்டியதில்லை. நானே அப்பணியைச் செய்து கொள்கிறேன்" என்று சொன்னார். அந்த இடையனும் தான் செய்த குற்றத்தை உணர்ந்து, அஞ்சியவனாக விசாரசருமரை வணங்கி விடைபெற்றுச் சென்றான்.

பசுக்களை மேய்ப்பதற்கு அவைகளின் உரிமையாளர் களிடமிருந்து விசாரசருமருக்கு இசைவு கிடைத்தது. பின்னர் பசுவை மேய்க்கும் கம்பையும், அவற்றைப் பிணைக்கும் கயிறுகளையும் கையில் தாங்கியவராய், தம் குடுமி அசையவும், மார்பில் மான் தோலோடு நூல் விளங்கவும், பசுக்களை மேய்க்கும் பணியை மேற்கொண்டார். அவைகளை நல்ல புற்தரைகளுக்கு ஓட்டிச் சென்று மேய விடுவார். பசுக்கள் மேய முடியாத இடங்களிலுள்ள புல்லைப் பறித்துக் கொண்டு வந்து அவைகளுக்கு ஊட்டுவார். நிழலில் ஒதுங்க விடுவார். பால்சுரக்கும் நேரத்தில் அவைகளைப் பால் கறக்க வீடுகளுக்கு ஓட்டிச் செல்வார். இவ்வாறு கண்ணை இமை காப்பதுபோல் பசுக்கூட்டங்களைக் காத்து வந்தார் விசாரசருமர்.

பசுக்கள் விசாரசருமரிடம் அச்சம் அறியாது பழகி வந்தன. மண்ணியாற்றங் கரையிலும் அதைத் தொட்டுள்ள இடங்களிலும் பசுக்களை மேய்த்து, மாலை நேரமானதும் அவைகளை வீடுகளுக்குத் திருப்பிக் கொண்டுவருவார். இவரது கருத்தான பேணுதலில் பசுநிரைகள் பாலை மிகுதியாகக் கொடுத்தன. செழிப்பு நிறைந்தது. அனைவரும் இது கண்டு மகிழ்ந்தனர்.

நல்லூட்டமும், போதிய ஓய்வும் பெற்ற ஆநிரைகள் அடிக்கடி தாமே பாலைச் சுரந்து கொண்டு நின்றன. அன்பால் விசாரசருமர் பக்கம் வந்து அவை அணையும் போது பால் சுரக்கும். இதைக் கண்ட இளம் விசாரசருமர் உள்ளம் உவகை கொள்ளும். இவ்வாறு பால் சுரப்பதைக் கண்ட அவர், இது இறைவனார் திருமஞ்சனத்திற்குப் பயன்படுமோ என எண்ணினார். முற்பிறப்பின் தொடர்பால் அவர் மனத்தில் ஆசை எழுந்தது. அது, இறைவருக்குத் திருமஞ்சனமாட்டி வழிபாடு செய்ய வேண்டும் என்பதுதான்.

விசாரசருமருக்கு இந்த எண்ணம் தோன்றியதும் மண்ணியாற்றங் கரையிலுள்ள ஒரு மணல் திட்டில், ஆத்திமரத்தின் நிழல் படிந்துள்ள இடத்தில் மணலைக் கொண்டு ஒரு சிவலிங்கத்தை உருவாக்கினார். அதைச் சுற்றி மணலைக் கொண்டே மதிலும் கோபுரமும் திருக் கோயிலும் செய்தமைத்தார். விசாரசருமர் சிறு பிராயத்தினர் அல்லவா! அவருக்கு வேறு என்ன செய்ய இயலும்? பின்னர் இறையனாருக்கு அணியத்தகும் அங்குள்ள ஆத்திமலர், செழுந்தளிர், பிறமலர்கள் ஆகியவற்றைக் கொய்து இலைக் கூடையிலே கொண்டு வந்து, அவர் அமைத்த ஆலயத்தின் பக்கம் மணம் வீசும்படியாகச் செய்தார்.

புதிய குடங்களைத் தேடிக்கொண்டு வந்து பசுக்கள் அருகே சென்று, பசு ஒன்றுக்கு ஒவ்வொரு காம்ப வீதம் தொட்டுக் குடத்தை நிறைத்தார். அப் பசுக்களும் அவர் தொடுமுன்னே பாலைச் சுரந்தளித்தன. அந்தப் பாற் குடங்களைக் கொண்டு வந்து தாம் அமைத்துள்ள ஆலயத்தின் ஒரு பக்கம் வைத்தார். பின்னர் வேண்டியவற்றைச் செய்து இறைவரைக் குடப்பால் கொண்டு அபிஷேகம் செய்தார். அன்பு மிகுந்து பொங்கி இவ்வாறு அவர் அடிக்கடி செய்து வரவே அரனாரும் அவரது அன்புக்குக் கட்டுண்டு சிவலிங்கத்தில் கலந்து அவ்வழிபாட்டை ஏற்றுக் கொண்டார்.

பசுக்கள் இறைவரின் திருமஞ்சனத்துக்கு இவ்வாறு பாலைக் குடம் குடமாகச் சுரந்தத்த போதும் தம் மடிகளில் பால் குறையாது எப்போதும் போலவே மறையவர் இல்லங்களிலும் பாலைச் சுரந்தளித்தன.

விசாரசருமர் இவ்வாறு தொடர்ந்து செய்து வரவே, இந்த வழிபாட்டின் தன்மையை அறியாத அயலான் ஒருவன், இச்செயலை அவ்வூர் அந்தணர்களுக்கு அறிவித்தான். அவர்கள் உடனே விசாரசருமரின் தந்தையாகிய எச்சதத்தனை வரவழைத்தார்கள். அவரிடம் அவர்கள், "எச்சதத்தரே, இடையன் பசுக்களை மேய்க்க அறியாதவனென்றும் யான் அவைகளை நலமாக மேற்பேன் என்றும் உமது மகன் அறிவித்தான். நாங்களும் இசைந்தோம். இப்போது அவன் நடந்து கொள்கின்ற முறையைத் தெரிவீரா?" என்று வினவினார்கள்.

எதுவும் தெரியாத எச்சதத்தன், "தெரியாதே! அவன் என்ன செய்கிறான்" என்று அவ்வந்தணர்களைப் பார்த்துக் கேட்டார்.

"வேள்விக்குரிய பாலையெல்லாம் வீணாக்குகிறான். மண்ணியாற்றின் கரையில் பாலைக் கறந்து, மணலில் வீணாகச் சொரிந்து, தம் மனம் போனவாறு நடந்து கொள்கிறான்" என்று அந்தணர்கள் தெரிவித்தார்கள்.

"என் மகன் சிறு பிள்ளை. அவன் செய்த குற்றத்தை இதுவரை நான் அறியாதிருந்தேன். இதற்கு மன்னிக்க வேண்டும். இனி அவன் அவ்வாறு பிழை செய்வானாயின் அது நான் செய்ததாகவே ஆகும்" என்று எச்சதத்தன் அவர்களிடம் விடைபெற்று வெளியேறினார்.

அந்தணர்களிடம் விடைபெற்று வந்த எச்சதத்தன் மாலையில் வீடு வந்த சேர்ந்தார். தன் மகனிடம் அவர் இது பற்றி எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை. மறுநாள் காலையில், அவர் அறியாது அவரைப் பின் தொடர்ந்து சென்றார் எச்சதத்தன்.

விசாரசருமர் பசுக்களை மண்ணியாற்றின் கரைக்கு ஓட்டிச்சென்றார். இது கண்ட எச்சதத்தன் அருகே நின்ற மரம் ஒன்றில் ஏறி அமர்ந்தபடி அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைக் கவனித்து கொண்டிருந்தார்.

விசாரசருமர் ஆற்றில் நீராடி எழுந்து சிவபிரானுக்கு எப்போதும்போல் மணலில் திருக்கோயிலும் சிவலிங்கமும் உருவாக்கினார். பின்னர் மலர்களைப் பறித்துக் கொண்டுவந்தார். பசுக்களின் மடியிலிருந்து பொழிந்த பாற் குடங்களை வைக்க வேண்டிய இடத்தில் வைத்தார். பூசைக்கு வேண்டிய பிற பொருள்களும் சேகரிக்கப்பட்டன. பின்னர் இறைவனை வழிபடத் தொடங்கினார். அரனாரிடம் அவருக்கு உண்மையான பாசமும் நேசமும் ஊற்றெடுத்துப் பொங்க, மலர்களை எடுத்து இறைவருக்கு அர்ச்சித்தார். பிறகு பாற்குடங்களை எடுத்து நீராட்டினார். தம்மையே மறந்த நிலையில் இறைவன் மீதுள்ள பக்தியில் ஒன்றித் தோய்ந்து நின்றார்.

இந்நிகழ்ச்சியை எச்சதத்தன் கண்டார். அவர் மனம் சினத்தில் பொங்கி எழுந்தது. அகவுணர்வின்றி வெறிகொண்ட நிலையில், மரத்தினின்று குதித்து, தம்மைந்தர் பக்கம் ஓடி வந்தார். கையிலிருந்த கம்பு கொண்டு அவரது முதுகில் அடித்தார். வாயில் வந்தவாறு கொடுஞ் சொற்கள் கூறித் தூற்றினார்.

இறைவரிடம் முற்றிலும் உள்ளத்தைப் பதித்திருந்த விசாரசருமருக்கு இப்புற உலக நிகழ்ச்சிகள் எதுவுமே தெரியவில்லை. இந்த விந்தையை உணர்ந்தாரில்லை எச்சதத்தன். அவரிடம் அந்த ஞானமே இல்லாதிருந்தது. பிள்ளையாரோ பாற் குடங்களைக் கொண்டு மாலகற்றும் பெருமானுக்கு கோல அபிஷேகம் செய்து கொண்டே இருந்தார். எச்சதத்தனுக்கு மேலும் சீற்றம் வளர்ந்தது. திருமஞ்சனக் குடத்தை அவர் தம் காலாலே இடறிப் பாலை சிந்தினார்.

தம் வழிபாட்டிற்கு யாரோ இடையூறு செய்வதை இப்போதுதான் விசாரசருமருக்கு உணர்ந்து கொள்ள முடிந்தது. அது தம் தந்தை என்பதை அறிந்தார். என்றாலும் இக்கொடிய செயலை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அவர் அங்கே கிடந்த கோலை எடுத்தார். அது அவருக்கு மழுவாக ஆயிற்று. அதை எச்சதத்தன் கால்களை நோக்கி விசினார். அரனார் வழி பாட்டிற்கு அவலம் இழைத்தாரல்லவா! அம்மழு இவரது இரண்டு கால்களையும் வெட்டி வீழ்த்தியது. மண்ணில் வீழ்ந்தார் அவர். விசாரசருமர் இறைவன் வழிபாட்டிற்கு நேர்ந்த இடையூறு நீங்கியதென எண்ணித் தாம் செய்து கொண்டிருந்த வழிபாட்டைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்.

இந்நேரம் விசாரசருமருக்கு சிவரோக நாதரின் திவ்விய தரிசனம் கிடைத்தது. பூதக் கூட்டங்கள் புடைசூழ, தேவர்களும் முனிவர்களும் வேத மொழிகளால் வியந்து துதிக்க, பிறைசூடிய பெருமான் விசாரசருமருக்கு காட்சி கொடுத்தருளினார். அன்பு முதிர்ந்த பாலகனார் இறையனார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்.

சிவபெருமான் தம் பாதங்களில் வீழ்ந்து தொழுகின்ற பாலகனாரைத் தம் திருக்கையால் எடுத்து, "எமக்காக நீ உன்னைப் பெற்ற தந்தையின் கால்களை வெட்டி இறப்பித்தாய். யாமே உனக்கு இனித் தந்தையாக இருப்போம்," என்று திருவாய் மலர்ந்தருளி, நிறைந்த கருணையினால் அவர் உடல் தழுவி, உச்சிமோந்து மகிழ்ந்தார். இறைவன் திருக்கரம் தீண்டப் பெற்ற விசாரசருமர் அருள் வெள்ளத்தில் மூழ்கி ஒளி மயமாக ஆனார்.

அரனார் அவரைத் திருத்தொண்டர்களுக்குத் தலைவராக ஆக்கி, தாம் ஏற்றுக் கொள்ளும் அமுதும் பரிவட்டமுடம், மாலை முதலியவனவும் விசாரசருமருக்கே கிடைக்கும் சண்டேசர் பதத்தைக் கொடுத்தருளினார். தமது சடைமுடியிலுள்ள மாலையை எடுத்துப் பாலகனாருக்கு அணிந்தார் இறைவர். எங்கும் மகிழ்ச்சி; மலர்மழைப் பொழிவு. சிவகணநாதர்கள் பாடி, ஆனந்தக் கூத்தாடிக் களித்தனர். வேதங்கள் முழங்க, விதவித இசைகள் ஒலிக்க சண்டேசுரப் பெருமான் சடைமுடி நாதரை வணங்கிச் சிவலோகப் பேறு பெற்றார்.

எச்சதத்தனுக்கும் எம்பெருமான் அருள் வாய்த்தது. அவர் தாம் செய்த குற்றத்தினின்றும் நீங்கித் தமது உறவினரோடு திருக்கயிலை அடைந்து சிவபேறு பெற்றார்.

விசாரசருமர் வரலாற்றிலிருந்து இறையனாருக்காகச் செய்யப்படும் எச்செயலும் ஏற்றமிக்க செயல் என்பதைத் தெரிந்து கொள்கிறோமல்லவா?

**மனதில் இருக்கும் அறிவுசொரூபத்தை நினைந்து நமது அறிவை வளர்ப்பது புத்தகங்களைப் படித்து அறிவைப் பெறுவதைவிட உயர்ந்தது. இச்செயலுக்குத்தான் இறை வணக்கம் அல்லது கடவுள் வழிபாடு என்று பெயர். இதைச் செய்ய மறுக்கின்ற மாணவன் தன் மனத்தகத்திருக்கும் மூல அறிவு ஓங்குவதற்கு இடம் தராது தடுத்து விடுகிறான். விறகுக் கட்டையினுள் தீ இருக்கிறது. தகுந்த சூழ்நிலையை உண்டுபண்ணினால் அது தோற்றத்துக்கு வருகிறது. கடவுள் வழிபாடு அத்தகையது. உள்ளிருக்கும் அறிவு சொரூபத்தை அன்புடன் வணங்குகின்றவன் தானே அறிவு சொரூபமாகவும், அன்பு சொரூபமாகவும் ஆகின்றான். மாணவன் ஒருவனுக்குத் தெய்வ வழிபாடு இன்றியமையாதது.**

(சுவாமி சித்பவானந்தர்.)



# பெரியோரை மதித்தல்



செல்வி. லாவண்ணியா விமலேந்திரன்

நல்லை நகர் நாவலர் எமக்காக, எம்மை நல்வழிப்படுத்த ஆக்கித் தந்த நன்நெறிகள் ஏராளம். வருடங்கள் பல உருண்டாலும், இன்றைய காலத்தில் அவற்றைப் படிக்கும்போது இத் தலைமுறைக்காகவே எழுதப்பட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. ஆம்! பெரியோரை மதித்தல் என்ற கருத்தை வலியுறுத்தி நாவலர் பெருமான் கூறிய அறிவுரைகளை இங்கு தொகுத்துள்ளேன்!

பிதா, மாதா, பாட்டன், பாட்டி, மாமன், மாமி, சகோதரன், சகோதரி, மனைவி, உபாத்தியாயர், குரு முதலிய பெரியோர்களை பயத்தோடும் அன்போடும் வழிபடல் வேண்டும். அவர்கள் எமக்கு எக்குறை வைப்பினும், எக்குற்றம் செய்யினும், அதனைப் பொருட்படுத்தாது பொறுத்துக் கொள்ளுதல் மிகவும் அவசியம். ஒரு நாட்டை ஆளும் மன்னன் எக்குற்றம் செய்யினும் அவனை நாம் எதிர்ப்பதில்லை. அடங்கித்தான் நடக்கிறோம். அதுபோலவே, பிதா, மாதாவுக்கு அடங்கியே நாம் நடக்க வேண்டும்.

எம்மைப் பெற்ற தாய் தந்தை சிறிதும் வருந்தாவண்ணம் அவர்களுக்கு இயன்றமட்டும் உணவு, உடையளித்து அவர்களைப் பாதுகாப்பது எமது கடமை. அவர்களுக்கு எத்தகைய வியாதிவரினும் உடனே எம் மனம் பதைபதைக்க வேண்டும். சிறந்த வைத்தியர் மூலம் மருத்துவம் செய்வித்தல் வேண்டும். அவர்கள் எதை விரும்பி செய்து தரும்படி கேட்கிறார்களோ அதை சிறிதும் மறுக்காது செய்து தரல் வேண்டும். அதேவேளை **பிள்ளைகள் தம் கல்விக்கும் நல்லொழுக்கத்துக்கும் இடையூறாக பிதா மாதா சொல்லும் சொற்களை ஏவல்களை மறுத்தல் பாவமல்ல** என்பது நாவலர் பெருமானின் கருத்தாகும்.

'தந்தை தாய் பேண்'– என்பது நீதி மொழி! அதை உணராது தம்மை மிக வருந்திப் பெற்றெடுத்த தாய் தந்தை பசித்திருக்க தாமும் மனைவி பிள்ளைகளும் வயிறார நிறைய உண்டு, தாம்தான் பெரிது என எண்ணி, வரும் பழி பாவங்களுக்கு அஞ்சாது, பிதா மாதாவை வஞ்சித்து அன்னியர்களுக்கு உதவி செய்கின்றனர். இது தவறு என உணர்த்துகிறார் நாவலர்.

மாதா, பிதா இறக்கும் போது அவரைப் பிரியாது உடன் இருக்க வேண்டியது பிள்ளைகளின் கடமை! அந்த இறுதி நேரத்தில் அவர்களது மனம் கலங்காமல் பார்த்துக் கொள்வது அவசியம். எம் மனம் கலங்கினாலும் அவர்கள் கவலைப்பட நாம் அழக் கூடாது. அவர்களுடைய மனம் சாந்தமாக கடவுளின் திருவடியில் அழுந்தும்படி அறிவொழுக்கம் உடையவர் மூலம் அருட்பாக்களை ஓதுவித்து, நல்லறிவைப் போதிக்க வேண்டும். எந்த வீண் வார்த்தைகளும் அவர்களது காதில் விழாமல் பார்த்துக் கொள்வது அவசியம். உயிர் பிரியும் நேரத்தில் அவர்கள் ஏக்கமடையாமல் இருக்க பார்த்துக் கொள்ள முயல வேண்டும்.

அவர்கள் இறந்தபின் அவர்களுடைய உத்தரக் கிரியைகளை தத்தமது வசதிக்கேற்ப, எந்தவித உலோபித்தனம் காட்டாமலும், விதிப்படி மிகவும் கவனமாகச் செய்து முடித்தல் வேண்டும். அவர்களுக்கு செய்ய வேண்டிய சிரார்த்தங்களை (திவசம்) அவர்கள் இறந்த திதியிலும், புரட்டாதி மாதத்து மஹாளய பட்சத்திலும் செய்தல் அவசியம். பலர் தமது பெற்றோர் உயிருடனிருக்கும் போது அவர்களுக்கு உணவு உடை கொடுத்து பராமரிக்காது மனக்கஷ்டங்களைக் கொடுத்துவிட்டு, அவர்கள் இறந்தபின், சுற்றமும் உலகும் மெச்சும்படி, ஏராளமாகச் செலவிட்டு கிரியைகளைச் செய்கின்றனர். ஐய்யோ இது எவ்வளவு அறியாமை என எண்ணி வியக்கிறார் நாவலர். இதனால் வரும் பயன்தான் என்ன!

பிதா மாதா முதலிய பெரியோர்களை கடும் சொற்களால் கோபித்து உலுக்கிய பாவிகளுக்கு என்ன பலன் கிடைக்கும்? நரகத்தில்– தமது முகத்தை அட்டைகள் கடித்து இரத்தம் குடிக்க, அதனால் துடித்து, சரீரம் நடுங்க அலறும்படி யமதூதர்கள் சுடுகின்ற கார நீரையும் உருக்கிய தாமிர நீரையும் அவர்கள் கண் மீது வார்க்கும்போது படும் துன்பம் சொல்லும் தரமல்ல. பெரியோர்களுக்கு ஏவல் செய்ய மறுத்த பாவிகளுடைய முகத்தை யமதூதர்கள் கோடரியினால் கொத்துவார்கள்; பெரியோர்களை கோபத்தினால் கண்சிவந்து ஏறிட்டுப் பார்த்தவர்களுடைய கண்களில் அக்கினியால் காய்ச்சிய ஊசிகளால் குத்தி நீரை வார்ப்பார்கள்.

பெற்றோர் மற்றும் பெரியோர்களை கடிந்து கொண்டவர்கள், அவர்களை உதாசீனம் செய்தவர்கள் சுயநினைவற்றவர் களாகவும், உடல் முழுவதும் வாயு ரோகத்தினாலும், பெருவியாதியாலும் வருந்துவர். தாய் தந்தையை கவனிக்காதவர்கள் கல்வி கற்றுத் தந்த ஆசிரியர்களுக்கு கொடுக்க வேண்டிய ஊதியத்தை கொடாதவர்களும் தரித்திரம் பிடித்தவர்களாய் பசியினால் வருந்துவர். மனைவி பிள்ளைகள் வருந்த பிச்சை எடுக்கக்கூடிய சூழ்நிலையையும் உணர்வர்.

புலவர்கள், ஞானிகள், மூடர்கள், பெண்கள், பிரமச்சாரிகள் யாராயிருந்தாலும் பிதா மாதாவின் சிரார்த்தம் செய்தல் வேண்டும். எவன் தன்னுடைய தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் வறுமையினால் வருந்தும் போது தன் புகழுக்காக அன்னியர்களுக்கு தானம் கொடுக்கிறானோ அது தர்மமல்ல. அது அவனுக்கு அந்த நேரத்தில் தேன்போல் இனித்தாலும் பின்னர் அது விஷம் போல் துன்பப்படுத்தும். புகழைத் தேடித் தருவதுபோல் தோன்றினாலும் கூட பின் அது நரக வேதனையைதான் தேடித்தரும். இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தையே தேடித் தரும்.

எனவே – நாவலரது மேற்கூறிய கூற்றுக்களை நன்கு மனதில் கொண்டு– பெரியோரை மதித்து கனம் பண்ண பழகிக் கொள்ளல் வேண்டும். இதனால் எமக்கு இன்பமே தவிர துன்பமில்லை.



மங்கையர் ஒளி

# தாய் செய்த நன்றி



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்



ஈழத்தில் தோன்றிய பெரியார்களில் "நாவலர்" சிறப்பாக நினைவு கூரப்பட வேண்டியவர். அவருடைய பணிகள் தமிழ் மொழியையும் சைவ வாழ்வியலையும் திசை மாறிச் செல்லாமல் தடுத்தவை. நாவலர் பிறந்த காலமும் வளர்ந்த சூழலும் அவர் முனைப்பாகப் பணி செய்ய வாய்ப்பளித்தன. 'ஆறுமுகம்' என்ற இயற்பெயரைவிட 'நாவலர்' என்ற பட்டப் பெயருடன் இன்றுவரை நினைவு கூரப்படும் நாவலரைப் பற்றிப் பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. நாவலரின் பன்முகப்பட்ட திறன்களைப் பற்றிய ஓர் அறிமுகம் இன்றியமையாதது. நாவலரின் உழைப்புத் திறனை இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

" 1848 ஆம் ஆண்டு தொடக்கம் பத்து வருட காலம் மூச்சுவிட நேரமின்றி உழைத்தார். வளர்ந்தவர்களுக்குப் பாடம் சொல்லுதல், வித்தியாசாலையைத் தமது மாணவர்கள் மூலம் நடத்துதல், சிறுவர்களுக்கு ஏற்றமுறையில் பலதரப்பட்ட புத்தகங்கள் எழுதுதல், ஏற்ற முறையில் பழைய நூல்களைப் பரிசோதனஞ் செய்தல், கிறிஸ்தவ எதிர்ப்புகளுக்கு அணிவகுத்து முன்னிற்றல் என்றின்னோரன்னவை நாவலர் எடுத்த உழைப்புகள்."

(ஆறுமுக நாவலர்: ப:66)

நாவலர் 1822 ஆம் ஆண்டு பிறந்தவர். எனவே தன்னுடைய 26 ஆவது வயது தொடக்கம் தமிழுக்கும் சைவத்திற்கும் அயராது உழைத்துள்ளார். அவருடைய மும்மொழிப் புலமையும் (தமிழ், வடமொழி, ஆங்கிலம்) அவர் பணிகளுக்குப் பக்கபலமாக நின்றன. பேச்சு வன்மையும் எழுத்தாற்றலும் துணை செய்தன. நாவலர் வாழ்ந்த காலத்தில் யாழ்ப்பாணத்தின் நிலை எப்படி இருந்தது என்பதைச் சொக்கன் வருமாறு காட்டியுள்ளார்.

" அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சைவமக்கள் கிறிஸ்தவ சமயப் பொறியிலே சிக்கி அறியாமையிலே மூழ்கிக் கிடந்தனர். அவர்களின் அறியாமையைப் போக்க அவர் சமயப் பிரசங்கங்கள் செய்வதையும் சைவசமய உண்மைகளை நூல்கள் வாயிலாக வெளிப்படுத்துவதையும் சைவப் பாடசாலைகளைத் தாபித்துச் சிறார்களைச் சைவச் சூழலிலே வளர்ப்பதையும் குறிக்கொண்டு இப்பணிகளுக்குத் தம் வாழ்வையே பரித்தியாகஞ் செய்தார். பிரமச்சாரியாகவே வாழ்நாள் முழுவதும் விளங்கி 1879 ஆம் ஆண்டு இறையடி சேரும் வரையிலே சைவத்தை இந்நாட்டிலே காத்தார்."

(பைந்தமிழ் வளர்த்த பதின்மர்: ப:3-4)

நாவலருடைய காலமறிந்த பணிகளில் சிறார்களைப் பற்றிய பணி இன்று நாம் செய்ய வேண்டியதொன்றாக உள்ளது. சிறார்கள் எதிர்காலத்துச் சமூகத்தை வழிநடத்தும் பொறுப்புடையவர். எனவே அவர்களை நல்லவர்களாக வல்லவர்களாக உரு வாக்குவதற்காக நாவலர் மேற்கொண்ட முயற்சி இக்காலத்திற்கும் ஏற்றதாயிருப்பதை எடுத்துக் கூற வேண்டியதும் எமது தலையாய கடனாகும்.

சிறாருடைய கல்வியை முன்னேற்றப் பாடசாலைகளை அமைத்தும் பாடநூல்களை எழுதியும் நாவலர் பணி செய்தார். அக்காலத்தில் ஆங்கில மொழியைக் கற்பிக்க கிறிஸ்தவர் பல பாடசாலைகளை நிறுவினர். பாடநூல்களையும் எழுதி வெளியிட்டனர். நாவலரும் தமிழ் மொழியைக் கற்பிக்கச் சிறார்களுக்கு ஏற்ற பாடநூல்களை எழுதி வெளியிட்டார். 'பாலபாடம்' என்ற பெயரில் அந்நூல்கள் மாணவர் கல்வித் தரத்திற்கேற்ப அமைந்திருந்தன. சிறாருடைய வயது நிலைக்கும் குண இயல்புக்கும் ஏற்றவகையில் பாடங்கள் எழுதப்பட்டன. அவை இன்று நவீன கல்வி மரபு வழி நிற்போருக்கும் ஏற்றவையாகவிருந்தன. எடுத்துக் காட்டாக நாவலரால் எழுதப்பட்ட பாலபாடம் இரண்டாம் புத்தகத்தில் அமைந்துள்ள ஒரு கட்டுரையைக் குறிப்பிடலாம். இக்கட்டுரையின் தலைப்பு 'தாய் செய்த நன்றி' என அமைந்துள்ளது.

கட்டுரையில் தாயினுடைய அன்பைச் சிறார் நன்கு உணர்ந்து கொள்ளும் வகையில் கருத்துகள் தெளிவாகவும் எளிமையாகவும் எழுதப்பட்டுள்ளன. தாயினுடைய பணிகளை அவள் செயற்பாடுகள் மூலம் சிறார் உணர்ந்து கொள்ளும் வழிகாட்டல்கள் வரிசைப்படுத்தி எழுதப்பட்டுள்ளன.

1. பாலூட்டும் பணி
2. தாலாட்டும் பணி
3. குழந்தைக்காய் வருந்தும் உள்ளம்
4. நோயிலிருந்து காக்கும் பணி
5. கற்பித்தல் பணி
6. வழிபாட்டிற்குப் பயிற்றும் பணி
7. தாயன்பைச் சிறார் பேணல்
8. தாய்க்குச் சேவை செய்தல்

சிறாரின் வளர்ச்சியில் தாயின் பங்களிப்பு விலை மதிக்க வெண்ணாதது. மென்மையான தாயின் முலையிலே பாலுண்ணும் குழவி நிலை முதற் பகுதியில் சிறாருக்கு விளக்கப்படுகின்றது. தாய் பாலூட்டியதைக குழந்தை நினைவில் வைத்திருக்க முடியாது. ஆனால் வளர்ந்த சிறார் அக்காட்சியைப் பிறிதொரு குழந்தைக்குப் பாலூட்டும் போது காணமுடியும். அவ்வாறு அக்காட்சியைக் காணும் போது என்னுடைய தாயும் எனக்கு இப்படித்தான் பாலூட்டியிருப்பாள் என எண்ணுவர். அந்த எண்ணத்தை ஆழமாக அவர்களுடைய மனத்திலே பதிய வைக்க நாவலர் முதலாவது பகுதியின் நிறைவாக ஒரு வினாவை எழுப்பி விடையையும் தெளிவாகத் தந்துள்ளார்.

"உன் கன்னத்தில் இனிமையாகிய முத்தம் கொடுத்தவள் எவள்?– என் தாய்"

தாயினுடைய பாலூட்டும் பணியை மிக நயமாகச் சிறாருடைய மனதிலே பதிய வைக்கும் நாவலர் பயன்படுத்திய 'என்தாய்' என்னும் தொடர் அவருடைய உள்ளத்திலும் தாய் பற்றிய பதிவு எவ்வளவு ஆழமாக இருந்ததென்பதை நன்கு புலப்படுத்துகின்றது.

அடுத்துக் குழந்தையைத் தூங்க வைப்பதற்குத் தாய் தாலாட்டுப் பாடும் பணியைக் குறிப்பிடுகிறார். உறக்கம் வராத குழந்தையை

இனிமையான பாடல்களைப் பாடித் தாய் உறங்கவைப்பாள். அவள் பாடும் ஒலியில் மயங்கிக் குழந்தை உறங்கும்.

"நீ உறக்கம் கொள்ளும்படி இனிமையான கீதங்களைப்பாடி நீ அழாதபடிக்குத் தாலாட்டினவள் எவள்? என் நற்றாய்".

இங்கு நற்றாய் என்ற பழைய சங்கத் தமிழ்ச் சொல்லை நாவலர் பயன்படுத்தியுள்ளார். சங்ககாலத்தில் பாலூட்டும் தாய் 'முலைத்தாய்' எனவும் 'செவிலித்தாய்' எனவும் அழைக்கப்பட்டாள். குழந்தையின் 'வளர்ப்புத்தாய்' எனவும் பிற்காலத்தில் அழைக்கப்பட்டாள். ஆனால் நாவலர் 'நற்றாய்' என்ற சொல் பெற்றதாயைக் குறித்ததை இக்கட்டுரையில் தகவலாக இணைத்துள்ளார். தமிழ்ச் சொற்களின் தெளிவான பொருளைச் சிறார் நன்கு அறியும் வண்ணம் கட்டுரையிலே பயன்படுத்தியுள்ளார்.

அடுத்த பகுதி குழந்தை தூங்கும்போது அருகிலே தான் தூங்காமல் விழித்திருந்த தாயின் அன்பைக் குறிப்பிட்டுள்ளார்.

"உனக்காக அன்பின் கண்ணீர் விட்டவள் எவள்? – என் அன்னை!". இங்கு தாலாட்டித் தூங்கச் செய்த குழந்தையை விட்டு விலகாமல் விழித்திருந்து காக்கும் அன்பு நிலையை விளக்கியுள்ளார். இங்கு பயன்படுத்தப்பட்ட சொல்லாகிய 'அன்னை'யும் பழந்தமிழ்ச் சொல்லே. மேலைத்தேயக் குழந்தை வளர்ப்பு நிலைகள் நமது பிரதேசத்திலே மெல்லப் பரவிய காலத்தில் சிறாருக்கு எமது மரபான குழந்தை வளர்ப்பு நிலையைத் தெளிவாக்கியுள்ளார்.

அடுத்து நோயினால் குழந்தை நலிவுறுகின்ற போதில் அருகில் இருந்து பணிசெய்யும் தாயின் நிலையைக் குறிப்பிடுகிறார். நோயின் தாக்கத்தால் குழந்தை அழும் போது அது தன்னை விட்டுப் பிரிந்துவிடுமோ எனப் பயந்து தாய் அழுவாள். அவளுடைய அவலத்தை நாவலர் உணர்த்துகிறார்.

"நீ இறந்து போவாயோ என்று பயந்து அழுதவள் எவள்? என் மாதா!"

இங்கு 'மாதா' என்ற வடமொழிச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். சிறாரின் கல்வி நிலையில் வடசொற் பயன்பாடு அக்காலத்தில் பரவலாக்கம் பெற்றிருந்தது. பேச்சு மொழியால் அறிந்த ஒரு பிறமொழிச் சொல்லை எழுத்து மொழியிலும் பயன்படுத்தச் சிறாருக்குக் கட்டுரையிலே நாவலர் வழிகாட்டியுள்ளார்.

அடுத்துக் குழந்தையின் வளர்ச்சி நிலைகேற்பத் தாய் பணியாற்றுவதைக் குறிப்பிடுகிறார். இனிமையான கதைகளைக் கூறிக் குழந்தையின் துன்பத்தை ஆற்றும் தாயின் அன்பு மறக்கமுடியாதது. ஓடி விளையாடும் குழந்தை கீழே விழுந்துவிட்டால் உடனே ஓடி வந்து கவனிக்கும் தாயின் பணியைக் குழந்தை உணரவேண்டும். 'பிறர் துன்பப்படும் போது ஓடி வந்து உதவ வேண்டும்' என்ற மனித நேயத்தைக் குழந்தை தாயின் செயற்பாட்டால் மனதில் பதித்துக் கொள்ளும் அத்தகைய தாயை நாவலர் 'என் அருமைத்தாய்' எனச் சிறப்பித்துக் கூறுகிறார். குழந்தையின் துன்பம் தீர்க்கும் அருமைக்குணத்தால் தாயைப் பெருமைப்படுத்துகின்றார். கட்டுரையைப் படிக்கும் குழந்தை தாயின் அருமையும், பெருமையையும் உணரவேண்டும். என்பதே நாவலரின் நோக்கமாக இருந்துள்ளது. தாயின் கற்பித்தல் நெறி தனித்துவமானது. வீட்டில் இருக்கும் குழந்தை வளர்ந்து வெளியுலகத்தோடு தொடர்பு கொள்ளும் போது தெளிவான சிந்தனையுடன் இருக்க வேண்டும். அதற்கான அறிவூட்டல் பணியைத் தாயே மேற்கொண்டுள்ளாள். அதற்காக உலகத்தில் நடந்த நல்லதையும் கெட்டதையும் பழைய புராண இதிகாசக் கதைகள் மூலம் குழந்தைக்கு எடுத்துரைக்கின்றாள். குழந்தை வாய்மொழிக் கல்விப் பயிற்றலால் தான் வாழப்போகும் சமூகத்தை அறிந்து கொள்கிறது. அதனோடு இயைபுபடத் தன்னைத்தயார் செய்யும் மனப்பக்குவத்தைப் பெறுகின்றது. சிறாரின் வளர்ச்சி நிலையில் அடிப்படையாக அமையும் இத்தாயின் வாய்மொழிக் கற்பித்தல் நெறி கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. பின்னர் சிறார் பாடசாலைக் கற்கையில் ஈடுபடும் போது அருந்துணையாக அமைகிறது.

அடுத்து தாயின் மிக முக்கியமான பணியொன்றை நாவலர் காட்டுகிறார். 'வழிபாடு' பற்றித் தாய் புகட்டும் நல்லறிவு சிறாரின் முழுவாழ்வுக்கும் அடிப்படையாக அமையும். இதனை நாவலர் வருமாறு எழுதியுள்ளார்.

"நீ பாவம் செய்யாமல் விலகும் பொருட்டும் புண்ணியத்தைச் செய்யும் பொருட்டும் கடவுளிடத்தே அன்பு வைத்து அவரை எந்நாளும் வழிபடும் பொருட்டும் உனக்குப் போதித்தவள் எவள்? என்னைப் பெற்றதாய்!"

குழந்தையைக் கருவிலே தாங்கும் காலம் முதல் அது பெரியவனாக வளரும் வரை தாயின் வழிகாட்டலில் கடவுள் பற்றிய கருத்தைத் தெளிவாய் உணரவேண்டும். தாயின் அரவணைப்பில் வாழும்போது தாயைவிடப் பற்றுக் கோடாக 'கடவுட் சிந்தனை' இருப்பதைச் சிறார் நன்கு உணரவேண்டும். அதனை உணர்த்தும் பணியையும் தாயே ஏற்றிருக்கின்றாள். அவளுடைய வழிபாட்டிற்கான வழிகாட்டல் சிறாருக்கு நிலையான பற்றுக்கோடு ஒன்றை அறிமுகம் செய்து அதனை நன்கு உணரவும் உதவி செய்கின்றது. அதனால் தாய் நாம் பெற்ற மேலான கடவுட் கொடையாக உள்ளாள்.

இத்தகைய பெருமைக்குண இயல்புகள் கொண்ட பெற்றதாயைச் சிறார் அன்போடு பேண வேண்டும். இதனை நாவலர் வலியுறுத்தியுள்ளார்.

"இப்படியே உன்னிடத்தில் இவ்வளவு அன்புள்ளவளாய் இருக்கின்ற உன் மாதாவினிடத்திலே நீ எப்பொழுதாவது அன்பில்லாதவனாய் நடக்கலாமா?– நடக்கலாகாது"


மேற்காட்டிய வினாவும் விடையும் நாவலர் கட்டுரையின் இலக்கைத் தெளிவு படுத்துகின்றன. நாவலர் வாழ்ந்த காலத்தில் மேலைத்தேயப் பண்பாடு நம்பிரதேசத்தில் மிக வேகமாக ஊடுருவிக் கொண்டிருந்தது. எனவே அதனைத் தடுப்பதற்குச் சிறாரை நல்வழிப்படுத்த வேண்டியிருந்தது. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்ற மூத்தோர் அறிவுரையை நாவலர் மனங்கொண்டு இக்கட்டுரை மூலம் சிறாரை நல்வழிப்படுத்துகிறார்.

இதனால் கட்டுரையின் நிறைவாக தாய்க்குச் சேவை செய்யக் காத்திருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

"பிள்ளையே நீ கடவுளுடைய திருவருளினாலே சீவனோடிருக்கும் வரையும் உன் அன்புள்ள மாதா உனக்காகப்பட்ட பிரயாசத்திற்கு நீ பிரதி பலன் அளிக்கும்படி விரும்பிக் காத்திருக்க வேண்டும்."

சிறாரின் வாழ்நாட் கடமையொன்றை நாவலர் இக்கட்டுரையில் வகுத்துக் காட்டியுள்ளார். பிஞ்சு மனத்திலே தாயின் உணர்வுகளைப் பசுமரத்தாணி போலப் பதியச் செய்கிறார். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்ற மூத்தோரின் மூதுரைகளைச் சிறார் நன்கு உணர நாவலர் இக்கட்டுரையைப் பாடநூலிலே இணைத்துள்ளார். தாய் செய்த நன்றியை என்றுமே மறக்கக்கூடாது. தாய், நற்றாய், அன்னை, என்மாதா, என் அருமைத்தாய், என்னைப் பெற்ற தாய் என தாய் பற்றிய உணர்வை சொற்களால் உணரவைக்கும் நாவலர் பணி எக்காலத்திற்கும் சாலப் பொருந்தும். சைவ வாழ்வியலில் தாயின் பணிகளை இறைபணியாக மதிக்கச் சிறாரை வழிகாட்டினால் எதிர் காலத் தலைமுறையினரின் வாழ்வும் சிறப்பாயமையும். இக்கருத்தையே இன்றைய இளந்தலைமுறையினர்க்கு நாம் எடுத்துரைத்து எம் தாயின் சிறப்பைப் போற்றுவோம்.

# விருட்சங்களின் தெய்வீகத் தன்மையும் மதங்களில் அவற்றின் முக்கியத்துவமும்



இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

மரங்கள் ஆலயங்களோடு தொடர்படையும்போது தல விருட்சங்கள் என்னும் தனித்துவத்தையும் சிறப்பையும் பெறுகின்றன. ஆதி காலத்தில் மரங்களே மக்களின் வழிபாட்டுக் குரியனவாய் இருந்தன. இயற்கையில் இறைவனைக் கண்டவர் எம்மவர். இந்துக்களின் வழிபாட்டு மரபுகளில் மரவணக்கம் தொன்மையும், முதன்மையும் பெற்றிருந்தது. இயற்கை வணக்கத்தில் ஆரம்பித்த இந்துக்களின் வழிபாட்டு மரபுகள், பல பரிணாமங்களைப் பெற்று, இன்று ஆலயவழிபாடு, விரதங்கள், விழாக்கள், தியானம், பஜனை என பன்முகப்படுத்தி வளர்ச்சி அடைந்துள்ளன.

மரங்கள் வழிபாட்டுக்குரியனவாய் அமைந்தமைக்கு பல காரணங்கள் உண்டு. அவை மனித வர்க்கத்திற்கு, உணவாக, உடையாக, உறையுளாக அமைந்தன. உண்ண உணவும், உடுக்க உடையும், படுக்க நிழலும் தந்து பரந்து விரிந்து பச்சைப் பசேல் எனத் தோற்றமளித்த பெரு விருட்சங்கள் எல்லாம் ஆதி மனிதனுக்கு, தெய்வமாகத் தோற்றமளித்ததில் ஆச்சரியப்படுவதற் கொன்றுமில்லை.

மரவழிபாடு பண்டு தொட்டு உலகம் முழுவதும் பரவியிருந்தது. பாரதத்தில் மாத்திரமல்லாது பிரான்ஸ், கிறீஸ், அமெரிக்கா, ஆபிரிக்கப் பழங்குடி மக்கள் இன்றும் மரங்களை வழிபடுதல் கண்கூடு.

மரங்கள் பல வழிகளில் வழிபடப்பட்டன. இயற்கையில் இறைவனாகவும், தலவிருட்சங்களாகவும் மரங்கள் வழிபடப்பட்டு வருவதோடு அரசு, வேம்பு முதலிய மரங்கள் இறைவனின் திருமேனியாக கருதப்பட்டு வழிபடப்படுகின்றது.

மரங்களில் இறைவன் உறைகின்றான் என்பது ஒரு நம்பிக்கை. உதாரணமாக அரச மரத்தில், மும் மூர்த்திகளும் உறைகின்றனர் எனக் கொள்ளப்படுவதோடு, இம் மரத்தின் வேர்ப்பகுதியில் பிரமனும், தண்டுப் பகுதியில் விஷ்ணுவும், கிளைப்பகுதியில் சிவனும் விளங்குகின்றனர். மும்மூர்த்திகளின் உறைவிட மென்பதால், அரச மரம் "தேவாத்மா" என்றும் போற்றப்படுகின்றது. எனவே அரச மரத்தை வழிபடுவோர் மும் மூர்த்திகளை வழிபட்ட பலனை பெறுகின்றனர். மேலும் கிருஷ்ணர் அரசமரத்தில் என்றும் குடி கொண்டிருப்பதால் அரச மரத்துக்கு "கிருஷ்ண வாசம்" என்று ஒரு நாமமும் உண்டு. "மரங்களில் நான் அரச மரம்" என கீதை வாசகம் உண்டு.

அரச மரம், மரங்களுக்கெல்லாம் அரசு போன்றது. அதனால் அது அரசமரம் ஆகின்றது. காரணம், இம்மரம் எவ்வளவு உயர்ந்து வளர்கின்றதோ, அதே போல் மிக ஆழமாகச் செல்லும் ஆணி வேரையும் உடையது. பல கிளைகளாகத் தளைத்துப் பரவுவது போல், பல திசைகளிலும் வேர்களை உடையது. இவ்வாறு மேலும் கீழும் மற்ற மரங்களை விட உயர்ந்தும், படர்ந்தும், செழித்தும், செறிந்தும் ஆதிக்கம் செலுத்துகின்ற காரணத்தால் இது மரங்களுக்கெல்லாம் அரச மரம் ஆகின்றது.

முற் காலத்தில், ஆல், அரசு, அத்தி மரத்துச் சமித்துக்கள் வேள்வித்தீ அமைக்பயன்பட்டதோடு, அதன் எஞ்சிய சாம்பல், திரு நீறாகப் பயன்படுத்தப்பட்டது. சாணத்தின் சாம்பலிலிருந்து பெறப்படும் திருநீறு போல், இதுவும் புனிதமாகவும் தெய்வத் தன்மை பொருந்தியதாகவும் மருத்துவ பயன் கொண்டதாகவும் போற்றப்பட்டது.

அரச மரத்துக்கும் விநாயகப் பெருமானுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஆற்றங்கரையோ, குளத்தங்கரையே, ஆங்காங்கே, அரச மரத்தடியில் விநாயகப் பெருமான் அமைந்து, வழிபடப்படுவதை பெரும்பாலும் ஊர்களில் காணலாம். அரச மரமே அவரது கோயில். மரக்கிளைகள் செறிந்து அமைந்த கோயில்கள் "கோட்டம்" என அழைக்கப் பெற்றன. இவ்வாறு எழுந்த விநாயகர் கோட்டங்கள் தமிழ் நாட்டில் ஏராளம் உண்டு.

அரசு, வேம்பு, நெல்லி, வன்னி, வில்வம், வாழை, அசோகு, பன்னீர் ஆகிய மரங்களும், துளசி, அறுகு, பிராந்தி, முக்கிளுவை, விஷ்ணுகிராந்தி, அரளி, ஆகிய பத்திரங்களும் பூசைக்கு உகந்தவையாம். சிவனுக்கு வில்வமும், விநாயகருக்கு அறுகும், பகவானுக்கு துளசியும் அர்ச்சிக்க உகந்தவை. விநாயக சதுர்த்தியன்று, இருபத்தியொரு பத்திரங்களை தேடி எடுத்து விநாயகப் பெருமானை அர்ச்சிப்பர். அப்பத்திரங்கள் ஆவன, அரசு, அகத்தி, அரளி, இலந்தை, எருக்கு, ஊமத்தை, கண்டங் கத்திரி, கரிசலாங் கண்ணி, தாழை, துளசி, மருதம், மருவு, தேவதாரு, மாதுளை, முல்லை, வன்னி, வில்வம், வெள்ளெருக்கு, விஷ்ணுகிராந்தி, ஜாதி மல்லி ஆகியனவாம். இவற்றுள் மூலிகைகளும் அடங்கும்.

மாரியம்மன் கோயில்களில் அரசும் வேம்பும் இணைந்த இரட்டை மரங்கள் வழிபடப்படுகின்றன. அரசு வெப்பக் காற்றைத் தரும்; வேம்பு குளிர் காற்றைத் தரும். முரண்பாட்டுத் தன்மை கொண்ட இந்த இரு மரங்களும் இணைந்து தரும் நிழலும், காற்றும் அதிசுகம் தரவல்லன.

வனவாசத்தின்போது, இராமன் பஞ்சவடியில் வாழ்ந்ததாக இராமாயணம் கூறுகின்றது. இங்கும் ஐந்து மரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அரசு, வில்வம், ஆல், நெல்லி, அசோகு ஆகிய இந்த ஐந்து மரங்களையும் கொண்டு அமைக்கப் பெற்றது இராமாணம் குறிப்பிடும் பஞ்சவடி. இந்த ஐந்து விருட்சங்களும் "மகா விருட்சங்கள்" எனப்படும். தியானமும், தவமும் செய்ய உகந்த இடம் பஞ்சவடி.

புத்த சமயத்தை எடுத்துக்கொண்டால், புத்த பகவான் "போதி சத்துவர்" என்றழைக்கப்படுகின்றார். ஞானத்தைத் தரவல்லது அரச மரம். இதனால் அரச மரம், போதி மரம் என்றழைக்கப்பட்டது. அரசமர நிழலில் அமர்ந்து ஞானம் பெற்றதால், புத்தர் "போதி சத்துவர்" ஆனார்.

ஆலமரநிழலில் அமர்ந்து ஞானம் தருபவர் தட்சணா மூர்த்தி. ஞானம் அருள்வது சிவ அம்சம். எனவே சிவ அம்சமுடைய அரசமரம் வழிபாட்டுக்குரிய தகைமையை இந்த வகையிலும்

பெறுகின்றது. ஞானம் பெருகுமிடம் அரசமரத்தடி, அது குறையுமிடம் அவரைப்பந்தலடி என்கின்றன மருத்துவ நூல்கள்.

மகப் பேற்றுக்காகப் பிரார்த்தனை செய்பவர்கள் அரச மரத்தைப் பிரதட்சணம் செய்வது மரபு. "அரசனை நம்பி புருசனைக் கைவிட்டாள்" என்றொரு பழ மொழியுண்டு. இங்கு அரசன் என்பது அரசமரம். அரசமரத்தை நம்பி வலம் வந்தால் மகப் பேறு நிச்சயமாகக் கிடைக்கும். அரச மரத்தைச் சுற்றி வலம் வருவோர்க்கு மகப்பேறு உறுதி என்பதை இம்முது மொழி தெளிவாகத் தெரிவிக்கின்றது.

மாமரத்தை யாம் மறந்து விடலாகாது. பன்னிருகையோனோடு திருச்செந்தூரில் பொருத சூரபதுமன் ஒரு கட்டத்தில் கடல் நடுவே மாமரமாய் தோன்றினான். சூரன்போர் விழாவில் மாமரக்கிளை முக்கியத்துவம் பெறுகின்றது. அத்தோடு சமய சடங்குகளின் போது, பூரண கும்பம் அமைக்க உபயோகப்படுவதும் மா இலைகளே.

எனவே மரங்கள் புனிதமானவை, தெய்வீகம் வாய்ந்தவை, பயன்தருபவை, அவற்றைத் தறித்தல் பாவச் செயல் ஆகும். அவற்றை வளர்ப்போம், வழிபடுவோம், பயன்பெறுவோம்.

**நிகழ்வின் பார்வை**

# "இந்து ஒளி" பத்தாண்டு நிறைவுச் சிறப்பிதழ் வெளியீடும் இரண்டாவது தசாப்த காலத்தின் தொடக்கமும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டு வெளியீடான "இந்து ஒளி" பத்தாண்டு காலத்தை நிறைவு செய்து கொண்டு பதினொராவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருப்பது சிறப்பானதொரு நிகழ்வாகும். பத்தாண்டு நிறைவுச் சிறப்பிதழ் வெளியீடு, தீபாவளி தினமான கடந்த அக்டோபர் மாதம் 21ம் திகதியன்று இரத்லானை "சக்தி இல்லம்" மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது.

அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் மேற்படி மண்டபத்தில் விடுதிப் பிள்ளைகளது பிறந்தநாள் வைபவம் இடம்பெற்றது. இதில் சிறப்பு அம்சமாக வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் விடுதிப் பிள்ளைகளுக்காக கூட்டுப் பிரார்த்தனையொன்றை நடத்தினார்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து, மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் "இந்து ஒளி" சஞ்சிகை வெளியீட்டு வைபவம் ஆரம்பமானது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு க. ஸ்ரீபவன் தம்பதியினர் பிரதம விருந்தினர்களாக வருகை தந்திருந்தார்கள். மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நிகழ்வின் அறிமுக உரையுடன் இணைந்த வகையில் வரவேற்புரையையும் நிகழ்த்தினார். அகில இலங்கை இந்து மாமன்றம் 1996ம் ஆண்டு மே மாதத்தில் தலைமையகக் கட்டிடத்தைப் பூர்த்தி செய்து செயற்பாடுகளை ஆரம்பித்த வேளையில், மக்கள் சேவை, வெளியீடுகள் ஆகிய இரு விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டதாகவும், அந்த அடிப்படையில்தான் இரத்மலானை மாணவர் இலவச விடுதியும், "இந்து ஒளி" சஞ்சிகையும் தோற்றம் பெற்றதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார். "இந்து ஒளி" 1996ம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து மலரத் தொடங்கியது. பத்து ஆண்டுகளாக நாற்பது இதழ்களை காலந்தவறாது தொடர்ச்சியாக– இந்த நாட்டின் இந்து சமய வெளியீடுகளில் ஒரு சாதனையாக வெளியிட்டு வந்திருக்கின்றோம். இப்படியான ஒரு இதழை பத்தாண்டுகளாக வெளியிடுவது என்பது இலகுவான காரியமல்ல. அதுவும் பல இன்னல்களுக்கு மத்தியிலே இந்தப் பணி தொடர்ந்து வந்தது. இந்தப் பணியை முன்னெடுத்துச் சென்ற பெருமைக்குரியவர்கள் பலர். அவர்களை முன்வரிசையிலே நாங்கள் அடையாளம் காணவேண்டும். அதில் ஒருவராகக் குறிப்பிடக்கூடியவர் அ. கனகசூரியர் அவர்கள். இந்த நாற்பது இதழ்களும் மலர்ந்ததிலே அவர் ஆற்றிய பங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பத்தாண்டு காலத்திலும் பல கஷ்டங்களின் மத்தியிலும் அவர் செய்த பணிதான் இன்று பத்தாண்டுகளைத் தாண்டிக் கொண்டிருக்கிறது என்று சொல்லவேண்டும். அடுத்ததாக மாமன்றத் துணைத் தலைவர்களுள் ஒருவரான திரு. த. மனோகரன். க. பொ. த உயர்தர வகுப்பில் இந்து நாகரிகம் படிக்கும் மாணவர்களுக்கு பயனுள்ள வகையிலான கட்டுரைகள் கடந்த பத்து ஆண்டுகளிலும் இந்து ஒளியில் வெளிவருவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் இவர். இந்த ஒளியின் தரத்தை உண்மையிலேயே இந்தக் கட்டுரைகள்தான் உயர்த்தி வைத்தன. இத்தகைய கட்டுரைகள் எல்லாவற்றையும் தொகுத்து பாடத்திட்டத்திற்கு அமைய இந்து நாகரிகம் என்ற பெயரில் தனியானதொரு நூலையும் விரைவில் வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம்.

ஒரு வீட்டிலே கணவன் சமைப்பதற்குத் தேவையான சகல பொருட்களையும் வாங்கிக் கொடுத்தால் மட்டும் போதாது. அவற்றை செப்பனிட்டு சிறப்புற சமைத்துத் தருவதற்கு மனைவி தேவை. அந்தப் பாணியிலே எங்கள் இந்து ஒளிக்கு ஒரு மகுடத்தை– ஒரு சிறப்பை ஏற்படுத்திய ஒருவரை நாம் பாராட்டவேண்டும். இந்தியாவில் மட்டுமல்ல மலேசியாவிலும் கூட சஞ்சிகையைப் பார்த்தவர்கள், இலங்கையிலும் இப்படியும் அச்சிட முடியுமா என்று சந்தேகத்துடன் கேட்டார்கள். இலங்கையின் தமிழ் அச்சுத் துறையிலே ஒரு புதிய மெருகை ஒரு புதிய செந்தளிப்பை ஏற்படுத்தியவர் நண்பர் பொன் விமலேந்திரன். அவர் கடந்த பத்து வருடங்களாக நாற்பது இதழ்களையும் அழகான அட்டைப் படங்களுடன் சிறப்பாக வடிவமைத்து வழங்கியவர். குறுகியகால அவகாசத்திலும் திருப்திகரகமாக அச்சிட்டு எப்படியும் உரிய நேரத்தில் எங்கள் கரங்களில் தந்துவிடுவார். அப்படியாக சிறப்புறப்

பணியாற்றிவரும் இவரை இந்து மாமன்றமும் இந்து ஒளியும் மறக்கமுடியாது.''

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தனது தலைமையுரையின்போது நமது இனத்திற்கும் மதத்திற்கும் இன்னல்கள் ஏற்பட்டுவரும் இக்காலகட்டத்தில் மக்களுக்கு கைகொடுத்து உதவ வேண்டிய அவசியம் இருப்பதால், மக்கள் சேவையே மகேஸ்வரன் பூசை என்பதற்கு அமைய மாமன்றத்தின் சமூக நலப் பணிகளும் சிறப்பாகத் தொடருவதாகக் குறிப்பிட்டு மாமன்றத்தின் பல சேவைகளுள் ஒன்றாக இந்து ஒளியையும் இந்துப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் ஆக்கங்களுடன் வெளியிட்டு வருவதாகவும், அதன் பத்தாண்டு நிறைவு சிறப்பு மலர் வெளியீட்டை பெருமையுடன் நடத்துவதற்காக இன்று நாம் அனைவரும் இங்கு ஒன்றிணைந்துள்ளோம்'' என்று சொன்னார்.

கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ம. பாலகைலாசநாத சர்மா தனது உரையின் போது ''இன்றைய நாள் புனிதமான நன்னாள் – தீபாவளி திருநாள்; ஒளிமயமான நாள். அந்த ஒளிமயமான நாளின் சிறப்பை, இந்த நிகழ்வு எடுத்துக் காட்டியிருக்கிறது என நினைக்கிறேன். பிரகாசமாக இருக்கின்ற நல்ல நாளிலே, அந்தப் பெயருக்குப் பொருத்தமான இந்து ஒளி மேலும் பிரகாசித்து தொடர்ந்து நீண்டகாலம் வெளிவரவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்'' என்று சொன்னார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாண்புமிகு நீதியரசர் க. ஸ்ரீபவன் அவர்கள் தனது உரையில் ''அகதிகளாக அல்லலுறும் மக்களின் துயர் துடைக்கும் பணியிலே ஈடுபட்டு வரும் அகில இலங்கை இந்து மாமன்றம், ஈழத்து இந்து மக்களின் குரலாக – அறிவியல் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் முகமாக மலரும் இந்து ஒளி எனும் இதழை வெளியிட்டு வைக்கும் வைபவத்தில் நானும் எனது துணைவியாரும் கலந்து கொள்வதையிட்டு பெரிதும் பெருமைப்படுகின்றோம். இந்து ஒளி பத்தாண்டு நிறைவு காணுவதற்கு பெரிதும் பங்களிப்புச் செய்த மூவர் இங்கு கௌரவிக்கப்பட்டது வரவேற்கத்தக்கது. இவர்களது தியாக உணர்வையும் உணர்வுமிக்க சேவையையும் பாராட்டுவது மட்டுமன்றி மாமன்றத்தின் மக்கள் சேவைக்கு புத்துயிர் கொடுத்துவரும் மாமன்றத் தலைவர், பொதுச் செயலாளர், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இப்படிப்பட்ட சேவை மனப்பான்மையுள்ள உறுப்பினர்கள் நிறைவேற்றுக் குழுவில் இருப்பதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். இன்னும் பல்லாண்டு காலம் இந்து மக்களை அரவணைத்து வழிகாட்டி, புதிய சீர்திருத்த சிந்தனைகளோடு தமது உண்மையான பணியை தொடர்ந்தும் முன்னெடுக்க எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசி இந்து மாமன்றத்திற்குக் கிடைக்க, இறைவனை இறைஞ்சி இம்மலர் இனிதே வெளிவருவதற்கு அயராது உழைத்த இங்கு பெயர் குறிப்பிடப்படாத அனைத்து உள்ளங்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்'' என்று சொன்னார்.

இந்து ஒளியின் பத்தாண்டு கால சிறப்பான வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்தமைக்காக திரு. அ. கனகசூரியர், திரு. த. மனோகரன், திரு. பொன். விமலேந்திரன் ஆகிய மூவரும் கௌரவிக்கப்பட்டமை இந்நிகழ்வின் சிறப்பு அம்சமாக இடம்பெற்றிருந்தது.

மேற்படி நிகழ்வை நெறிப்படுத்தி வழங்கிய மாமன்றப் பொதுச் செயலாளர் தனது நிறைவுரையின்போது, ''இந்து ஒளியின் பணிக்கு பலர் உதவி செய்திருக்கிறார்கள். இந்த சிறப்பிதழில் வெளியாகிய சிறப்புக் கட்டுரையொன்றின் ஊடாக திரு. கனகசூரியர் பலரை அடையாளம் கண்டிருக்கிறார். இந்து ஒளி எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்பது எங்கள் விருப்பம். அந்தப் பணியில் உண்மையிலேயே மாமன்றத் துணைத் தலைவர் திரு. தனபாலா அவர்கள் இந்து ஒளியுடன் நந்திக் கொடியையும் இந்தநாடு முழுவதும் பரப்பிக் கொண்டிருக்கிறார். அதுபோன்று பல வழிகளில் நீங்கள் எல்லோரும் உதவி செய்யலாம்'' என்று தெரிவித்தார்.

இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரியின் அதிபரும், மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினருமான திரு. ந. மன்மதராஜன் வழங்கிய நன்றியுரையைத் தொடர்ந்து, விடுதி மாணவிகளது தேவாரத்துடன் வைபவம் இனிதே நிறைவெய்தியது.

*– அ. கனகசூரியர்*

## மாமன்றத்தின் அனுதாபம்

கொழும்பு மாநகரசபையின் முன்னாள் முதல்வர் க. கணேசலிங்கம் அவர்களின் மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகின்றது.

இவர் அரசியல் , சமூக நலப் பணிகளில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தவர். தனது அரசியல் பணியின் ஊடாக தமிழ் மக்களுக்கு சிறப்பான சேவையாற்றியிருக்கிறார். மாமன்றத்துடன் நெருங்கிய தொடர்பையும், உறவையும் கொண்டிருந்தவர். மாமன்றத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வந்தவர்.

கொழும்பிலுள்ள இந்து மாணவர்களின் நலன்கருதி, மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனமான இந்து வித்தியா விருத்திச் சங்கத்தினால் இரத்மலானையில் நிறுவப்பட்ட கொழும்பு இந்துக் கல்லூரி மூடப்பட்டு சில ஆண்டுகள் இராணுவத்தினரின் பாவனையில் இருந்த காலத்தில் மீண்டும் மாணவர்களது கல்வி போதனைக்காக கல்லூரி திறக்கப்பட வேண்டும் என மாமன்றமும், இந்து வித்தியா விருத்திச் சங்கமும் போராடி வந்தபோது, கொழும்பு மாநகர முதல்வராகவிருந்த திரு.க. கணேசலிங்கம் அன்றைய கல்வி இராஜாங்க அமைச்சராகவிருந்த திருமதி இராஜமனோகரி புலேந்திரனுடன் இணைந்து எங்களது வேண்டுகோளை அன்றைய ஜனாதிபதியாகவிருந்த திரு. ஆர். பிரேமதாசாவின் கவனத்திற்கு கொண்டுவந்து அதனை வலியுறுத்தியது மட்டுமன்றி, ஜனாதிபதியை இரத்மலானைக்கு அழைத்து வந்து, அன்றைய பதில் அதிபராகவிருந்த திரு. ந. மன்மதராஜனிடம் மீண்டும் கல்லூரியை ஒப்படைக்கச் செய்வதில் பெரும் பங்களிப்புச் செய்தமையை நன்றிக் கடனுடன் நினைவு கூர்ந்து மாமன்றம் அன்னாருக்கு அஞ்சலி செலுத்துகிறது.

அமரர் க. கணேசலிங்கம் அவர்களது பிரிவால் துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு மாமன்றத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# திருவெம்பாவை

*திருச்சிற்றம்பலம்*

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியே வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய் ! 1

Tirucchitrambalam

O lass with bright and long eyes ! Having hearkened
To our hymning the rare and immense Flame
That is without beginning or end, will you slumber on?
Are your ears so hard of hearing? As the sound
Of the benedictory words in praise of the God of gods
Who wears long anklets, wafted over the street,
She sobbed and sobbed, rolled down from her
Flower-bestrewn bed and lay hapless on the floor,
In a trance. What may this be? Aye, what may this be?
Lo, this indeed is her true nature; Empaavaai ! - 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர் !
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசு மிடம்ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்? 2

In our confabulation during night as well as day,
You would say: "My love is for Siva, the supernal Flame."
Lo, did you now transfer your love to your flower-strewn bed,
O you bejewelled belle?
"Fie, fie on you, O ye bejewelled? Are these a few
Of your denigrating remarks? Is this the time
To sport and make fun? He whose form is Light,
Has deigned to come down to grace us with
His lotus-like feet which shy away when the celestials
Hail them. He is the Lord of Siva-loka; He is
The Lord-God of the Chitrambalam at Tillai.
Who indeed are His loving devotees?
Who indeed are we, Empaavaai !" - 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ! ஈசன் பழ அடியீர் ! பாங்குடையீர் !
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் ! 3

O One whose teeth are white as pearl ! You will daily
Wake up before we bestir, come before us
And affirm thus: "The form of our Sire is bliss; He is
The One ambrosial." Thus, even thus, will you
Utter words suffused with your salival sweetness.
Well, come. open your door.
"You foster great love for our God; Yours indeed is
Hoary servitorship. If you who are
Established in the service of Siva, do away with our -
The new servitors' littleness and rule us,
Will it spell evil?"
"Ha, is your love deceptious? Do we not all of us,
Know that your love is true? Will not those
Of chastened heart, hymn and hail our Siva?
Well, we who have come to wake you up,
Deserve all these, Empaavaai ! - 3

ஒள்நித் திலநகையாய் இன்னும் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயன்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய் ! 4

O One of pearly white teeth, has it not dawned yet for you?
Have they all -- the beautiful psittacine warblers, arrived?
We will count and report to you truly; yet do not meanwhile,
Close your eyes and waste your time.
He is the peerless and supernal Catholicon; He is the lofty import
Of the Vedas; He is the One that sweetens our vision:
We should so sing of Him that our hearts should melt
And our souls should dissolve in ecstasy.
So, we will not do the reckoning. May you come out
And do it; if there be any deficit in number,
Go back to slumber on, Empaavaai ! - 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏழக் குழலி பரிசேலோர் எம்பாவாய் ! 5

"We know of Annamalai unknown to Vishnu and unbeheld
By Brahma, the Four-faced." Thus you --
The deceptious one in whose mouth, milk and honey flow--,
Articulate falsehoods in which you are well versed.
Come and unbar the doors of your threshold.
Lo, the earth, the heaven and the dwellers
Of other planets, admiring His beauty -- rare to be
Comprehended --, sing of His great qualities
By which He enslaves us, rids us of our flaws
And rules us in grace. Thus they hail Him
And chant: "Siva ! O Siva !" Though they cry hoarse,
You whose tresses are perfumed, do not feel it,
Aye, do not feel it. Such is your plight, Empaavaai ! – 5

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றே?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கம் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய் ! 6

O gazelle-like one, you said: "On the morrow, I myself
Will come to wake ye up." Pray, tell us the direction
Into which your pridian promise shamelessly frittered away.
Has it not dawned for you yet? Unto us who come
Singing the lofty, long, ankleted and sacred feet of Him
Who is unknown to the heaven, the earth and all else,
And who on His own free volition deigns to come down
To foster us and rule us by enslaving us,
You ope not your lips; neither does your body melt in love.
Such deportment befits you alone. Lo, bestir
Yourself and come forth to sing Him who is
Our Lord as well as of others, Empaavaai ! – 6

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னை என் அரையன் இன்னமுதென் றெலலோமும்
சென்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் ! 7

O mother, are these too a few of your traits? He is the peerless One
Impossible to know of by the many celestials; He is
The God of sublime greatness. When divine instruments
Blare His glory, you would ope your lips and say:
"Siva, Siva!"
Even before the sound '*Tennaa*' is uttered, you would
Melt like wax in fire. Now listening to our several praises
Of Him as 'my Chief, my Monarch and my nectarean One'
Will you still slumber on? Like the addle-pated
And hardened ones, you lie abed in indolence. What can
We say of the greatness of such sleep, Empaavaai ! – 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் ! 8

When chanticleer crows, other birds begin to twitter everywhere;
When instruments melodise the sevenfold music,
White conches blare everywhere. Well, we sang of the lofty
And non-pareil supernal Flame that is Siva,
His peerless and divine mercy and His virtues beyond compare.
Did you not hearken to these? May you flourish !
What kind of sleep is this? You ope not your lips. Is this
Indeed the state of hers who in love is devoted to Siva
Like Vishnu whose bed is the Sea of Milk?
He remains the sole Lord at the end of the
Great Dissolution.
Lo, sing Him who is concorporate with His Consort,
Empaavaai ! – 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே !
உன்னைப் பிரானகப் பெற்றஉன் சீரடியோம்
உன் அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோண் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய் ! 9

O Ens who is more ancient than all the most ancient !
O One whose nature is more new than the most new !
We who have You as our Lord-God, are Your glorious slaves.
We will but adore the sacred feet of Your servitors;
We will belong only to them; it is they who will be
Our respective husbands. What, in joy, they bid us,
We will do, as their slaves. O our Sovereign-Lord ! If You
Bless us thus, we will lack nothing, Empaavaai ! - 9

பாதாளம் ஏழினும்கிழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர்? ஏதவன்பேர்? ஆறாற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்! 10

Far beyond the seven nether worlds are His ineffable
Flower-feet ! His flower-studded crown is the very
Peak of all Scriptures ! He is concorporate with His Consort !
His sacred form is not one only. He is the Genesis
Of the Vedas. He is but hailed by heaven and earth inadequately.
Lo, His servitors are legion. O ye flawless clan
Of hierodules attached to the shrine of Siva ! What indeed
Is His polis? What is His name? Who are His kin? Who are
Strangers unto Him? How may He be sung,
Empaavaai ! - 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்
மையயார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய் ! 11

O One whose hue is ruddy like the fiercely burning fire !
O One fully bedaubed with the white Holy Ash !
O opulent One ! O Consort of Her whose broad eyes are
Touched with khol and whose waist is willowy !
O Sire, the wide pool swarmed over by chafers,
We enter dinsomely, and with arms outstretched,
We plunge and plunge, hailing Your divine feet.
Thus do we, Your traditional servitors thrive.
O Sire, by Your divine sport of enslaving, they that are
Freed from misery, have come by salvific joy.
We too have gradually gained such redemptive grace.
Pray, save us from our wearying embodiment,
Empaavaai ! - 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய் ! 12

He is the holy ford where we can bathe in joy and get rid
Of our fettering embodiment. He is the God that dances
In the Hall of Gnosis at beautiful Tillai, holding fire
In His hand. He is the God who evolves,
fosters and resolves
The heaven, the earth and all of us, as if it were a play.
Let us hymn His glory and bathe in the flowery pool
The while chafers circle and bombinate over our jewelled tresses,
Our bangles tinkle and our fastened girdles
And ornaments sway and jingle. Lo, may you hail
The auric feet of the Lord and plunge in the great
Spring, Empaavaai ! - 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் ! 13

The pool of deep and swelling water is like unto
The harmonious combination of our Goddess Uma
And Sovereign Siva, as it is full of the twitter
Of birds as well as the hiss of water-snakes
And of devotees that come there to wash off their *malam*.
Let us barge into the swelling water, plunge and plunge,
The while our chank-bangles jingle and our anklets tinkle
And thus produce a mingling sound;
Let us so plunge into the pool of fresh lotus flowers
And bathe that our breasts and the pool water
Swell, Empaavaai ! – 13

காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய் ! 14

Ear-pendants are a-dangle; jewels wrought of fresh gold sway;
Chaplets on tresses flutter; swarms of chafers dance:
It is thus we bathe in cool water, sing of Chitrambalam,
So hymn the import of the Veda that it becomes ours,
Melodise the valiancy of Siva – the Flame –, hail in verse
His wreath of *Konrai*, extol in song His being
The First as well as the Last and celebrate in solemn strain
The greatness of the bebangled Uma's sacred feet
Who severally and commensurate with our attainment,
Fosters us. Sing of these and bathe, Empaavaai ! – 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றேநம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்
பணியாள்
பேரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம்ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் ! 15

O ye of beautifully bejewelled breasts covered by
Breast-bands ! Now and then would she say : "Our God!"
Lo, now her mouth ceases not to articulate the praises
Of Our Lord; her *manam* rejoices exceedingly;
From her eyes flow long streams of tears non-stop;
She falls on the ground but once and does her
Adoration without raising; never would she worship
Other gods. Is it thus one gets maddened
By the Great God? Lo, who indeed is the One whose
Form is Gnosis and who enslaves others thus?
We will, with full-throated ease hail Him and may you
Leap into the beautiful and flower-studded pool
And bathe, Empaavaai ! – 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையான்
என்னத் திகழ்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் ! 16

O Cloud, first suck the water of this sea, rise up
And turn blue like the hue of Her divine frame –
The Mother who has us as Her servitors. Lo, flash
Like Her willowy and fulgurant waist and resound
Like the auric anklets of our Magna Mater; form
A rain-bow like unto Her divine brow.
He is inseparable from that Goddess who owns us as Her
Slaves; on His devotees and on us, the lasses, Her holy
Bosom pours in spontaneous celerity sweet grace.
May you too cause such down-pour, Empaavaai ! – 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் ! 17

O lass whose darksome locks are fragrant ! The Bliss
Beyond compare which is not attainable by
Vishnu whose eyes are streaked red, by Brahma,
The four-faced or by other gods, is made ours
By His grace; it is thus He has glorified us.
He – the Lord-Hero –, visited each of our homes
And conferred on us His divine feet, lovely as the red lotus.
He is truly the Nectar to us who are the slaves
Of the Sovereign whose lovely eyes are suffused with mercy.
May you sing our God's praises, and leap into
The lotus-studded pool and bathe, to come by
Weal and welfare, Empaavaai ! – 17

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து காப்பரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிப்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவய் ! 18

O lass, like the lustre of the gems inlaid in the crowns
Of the celestials getting dimmed, when the Devas
Bow down at the lotus-like divine feet of the Lord
Of Annamalai, darkness fades away and the cool light
Of the stars vamooses, when the rays of the beautiful Day-star
Begin to spread. At that hour, sing the sacred feet
Of Him – the Nectar that is sipped by devotee-eyes –,
Who is female, male and neither of either
And who is the effulgent ether and earth and who is
Different from these. Sing of His ankleted feet, plunge
Into the water and bathe, Empaavaai ! – 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம் கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய் ! 19

"You are the refuge of our child entrusted to your hand."
We dread when this adage is renewed (for us).
So, our God we make a submission to You; deign to
Hear it. Let none but Your servitors embrace
Our breasts with their arms; let our manual services
Be for You alone; let our eyes – be it day or night –,
Behold nought but You. If You – our King –, be pleased
To grant us this boon, here and now, what matters it
To us whither the sun rises, Empaavaai ! – 19

போற்றி அருளகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய் ! 20

*திருச்சிற்றம்பலம்*

Bestow Your flower feet – the Source of all, praise be !
Bestow Your feet like ruddy shoots, the End of all, praise be !
Bestow Your auric feet, the Genesis of all lives, praise be !
Bestow Your feet that foster all lives, praise be !
Bestow Your feet twain, the ultimate Refuge of all lives, praise be !
Bestow Your feet unbeheld by Vishnu and the Four-faced,
praise be !
Empaavaai, we will thus hail the grace-abounding feet
And have our ritual bath in Maarkazhi, praise be ! – 20

Tirucchitrambalam

# TEMPLE WORSHIP

BY H.H. JAGADGURU ŚRĪ CANDRAŚEKHARENDRA SARASVATI ŚANKARĀCĀRYA SWĀMIGAL OF KĀÑCĪ KĀMAKOṬI PĪṬHAM, DISCOURSE DURING HIS DELHI VIJAYAM 1973

God exists everywhere. So, a question may be asked why there should be any temples built for Him? We know that God exists everywhere, but still the idea does not get firmly established in our mind. It does not get reflected in our daily actions. If one remembers God all the time, how can one utter any falsehood or commit evil acts?

